18183

பாண்டியன் கனவு



தென்காசி

அருள்மிகு காசிவிசுவநாத சுவாமி

திருக்கோயில்

தலவரலாறு

L8183



Rights Reserved

ஸ்ரீ உலகம்மன்

N. S. R. Raghunathan,
Artist, Madurai

ஸ்ரீ காசி விஸ்வநாதசுவாமி கோயில், தென்காசி.

A SHORT HISTORY
OF
Sri Kasiviswanathaswami Temple,
TENKASI.

1. Sri Lokambika-Kasiviswanathaswami temple is situate in the heart of the Town of Tenkasi, which is the head. quarters of the Taluk of the same name Tenkasi is a Railway Junction (Southern Railways) where the Virudhunagar-Tenkasi Chord line meets the Tirunelveli-Trivandrum section of the main line. The temple is five furlongs south of the station.

2 The story of the building of the temple is related in an inscription on a four-faced stone pillar in front of the tower. The inscription recites that God Viswanatha appeared to King Parakrama Pandiya in a dream and bade him build a new temple at Tenkasi as the then abode at Benares was going to ruin. Therefore the King set to work and in 1445 A D. the central shrine, Ardha Mantapam and the Mahamantapam were finished. In 1446 A. D. the Utsavar God Goddess were installed. The building of the nine stoieyed Gopuram with a striking clock was begun later and it was completed in the sixth year or a little afterwards by the King's brother Kulasekhara Pandiya Raja. This tower is built entirely of stone up to the first lintel and of brick and mortar higher up to the finials (stupas). A fire reduced the upper storeys of this tower to ruin about 200 years ago and the remaining structure stood in two forks over the first storey A local account says that the fire occurred in the Nawab's Record room which was then located in the Gopuram. The explanation is likely enough because even in the British regime a part of the temple served for many years as the Taluk Office where the annual Jamabandi was usually held. There is no record kept of the fire, nor any available.

3. There is a well, called Kasi Kinaru in the northern prakaram of the Swami shrine and it is commonly believed that the Holy Ganges appears in this well at the bidding of God Viswanatha of Benares which is hence held sacred. This is the tirtha of the temple.

4. Tradition has it that saints Agasthya, Mirugandu and Kannuvar have offerred worship to God Viswanatha here. Although Tenkasi does not find a place in the itinerary of the four Saiva Samaya Acharyas, Sambandhar, Appar, Sundarar and Manickavachakar; still it enjoys a high reputation of being visited by a stream of pilgrims and tourists from far and near throughout the year. Visitors to Courtallam nearby and lovers of sculptural art never miss a visit to this shrine.

5. The Shrine has a Sthalapurana sung by Alagia Chitrambala Desikar who flourished more than a century ago.

6. The temple is rich in inscriptions, the bulk of them relating to the Pandiyas of the 16th. and early 17th. centuries. One of the Kings who was lavish in his gifts to this temple was Tirunelveli Veera Venbamalai (1551-64 A. D) son of Abhirama Parakrama. Grants have been made for recitation of Vedas and songs of Tamil Saints. and performing services by servants, watchmen, accountants, treasurers etc.

7. In 1525 A. D. a Travancore Chief Sankaranarayana Bhootala Vira repaired the temple and reconsecrated the idol. The Inscriptions tell us that a Vishnu temple was built up within the enclosure during the time of Alagan Perumal Kulasekhara Deva by an Officer of his, Tiruvali Sriranga'roya Brahmadhi Royar. The Vishnu idol was later removed to perumal temple flanking the river Chittar on the left The fine Hall in front of the Amman Shrine was the work of a resident Mudali in 1572 A. D. Later the temple fell into a bad state of disrepair and was renovated during 1946-48 at a great cost by the Trustees with the co-operation of the public. Extensive repairs and improvements were effected.

8. The temple contains some exceptional stone carving in the Mantapam forming the entrance to Swami Shrine. There are ten remarkable figures eight of which are of colossal size. Some of them represent warrior Gods wearing ferocious expressions, crushing demons under foot. Some represent other Gods in all their sublimity and beauty Each God has several arms which carry weapons of war or instruments of peace. Two figures represent women in life size posed with exguisite grace Each of the ten figures together with the pillar standing at the back is of a single block of stone a-mono. lithic wonder.

9. The figures are (i) God Nataraja with ten hands in a dancing pose. Vishnu plays on a drum on his right and Brahma on cymbals on the Ieft. (ii) God Nataraja with sixteen hands dances with right leg upwards (Oorthuva dance). Saints Vyagrapada and Patanjali enjoy the dance with rapt reverence (iii) Rathi. goddess of beauty and love riding on a swan with ease and elegance. (iv & v) Veerabadra in two poses dressed in the panoply of war (vi) Manmatha - Cupid of Hindu mythology. (vii) Vishnu-playing on the flute. (viii) Goddess Kali. (ix & x) Two damsels one in the pose of wearing tilakam. with a mirror of bell - metal in the left hand and the other anxiously enguiring about the arrival of her lover. These figures are master - pieces of sculptural art carried out with rare skill and craftsmanship with an eye to detail and delicate traeery. Each is a loveable jewel in stone, fine poetry and frozen music.

10. The Vishnu temple referred to supra, has a fine porch with I2 sculptures. the distinctive feature of the porch being the delicate stone carving which gives the effect of elaborately finished wood work.

11. In the entrance to Amman shrine Vallabha Vinayagar greets our eyes with ten hands and his Sakthi on his left. This form of Ganesha is rare in these parts.

12. Shenbaga tree is the Sthala Vriksha of the temple.

13. The temple celebrates two major festivals in the year lasting 10 days each. The main festival comes off in Masi (February-March) and Thirukkalyana utsavam in Aipasi (September October.)

14. The overall length of the temple is 554 feet and width 318 feet.

15. The temple is administered by a body of three (nominated) honorary trustees and a paid executive officer appointed under the H. R. & C. E. (Adm) Department.

16. Goddess Lokambika is a very popular Deity and She is believed to grant all the prayers of devotees. Her Holy Presence is always inspiring and crowded: Blessed are they who have the fortune to offer worship to Her and God Viswanatha in this Shrine.

AN APPEAL

17. The ruined Rajagopuram of this temple which was an eyesore to the Hindu public remained a challenge unanswered all these 250 years. King parakrama's appeal also that future generations must come forward to effect repairs in case this temple falls into disrepair remained unheeded.

18. An influential committee under the inspiring and able leadership of Sri B. Sivanthi Athithan was formed on 9-11-1981 to renovate the Rajagopuram of this temple.

19. The resources of this temple being slender, this gigantic and unique renvoation which is estimated to cost 40 lakhs has to be accomplished by external support, All Devasthanams, Adheenams other religious, and charitable institutions, and Hindus are requested to contribute liberal donations towards this holy service and enrich their own spiritual wealth.

பொருளடக்கம்

வ. எண்.		பக்கம்
1.	முன்னுரை	
2.	ஆராய்ச்சி அணிந்துரை	
3.	வரலாத்துச் சுருக்கம் (ஆங்கிலத்தில்)	
4.	தூதி	1
5.	தலப்பெருமை	2
6.	சமயம்	3
7.	கோவில் அமைப்பும் தத்துவமும்	5
8.	மலைகள், ஆறுகள், நீர்நிலைகள்	6
9.	மடங்கள்	7
10.	அருகில் உள்ள தலங்கள்	8
11.	நகரில் உள்ள கோயில்கள்	8
12.	மக்கள் வாழ்க்கை	14
13.	மூர்த்தம்	15
14.	தலம்	18
15.	தீர்த்தம்	24
16.	மாதத்திருநாள்—வருடத்திருநாள்	25
17.	புராண வரலாறு	30
18.	சரித்திர வரலாறு	33
19.	கல்வெட்டுக்கள்	45
20.	இலக்கியம்	64
21.	நிர்வாகம்	67
22.	பிழைத் திருத்தம்	

முன்னுரை

இப்புத்தகம் தென்காசி காசிவிசுவநாத சுவாமி கோயில் வரலாற்றின் ஏழாவது பதிப்பு. இப்பதிப்பு வெளி வரும் வரையுள்ள இக்கோயிலின் முக்கிய நிகழ்ச்சி, களெல்லாம் தொகுத்து கொடுக்கப்பட்டுள்ளன. இத் திருக்கோயில் சரித்திர காலம் பெருமைகளை உரைத்து நிற்கும் சிற்பங்களின் படங்களும் கல் வெட்டுகளின் நகல்களும் இடம் பெற்றுள்ளன இறைவழிபாடு செய்யு முன்– அத்திருக்கோயிலின் இறைவன் நீக்கமற நிறைந்துள்ள சிவபெருமான் எந்தெந்த திருக்கோலத்தில் என்னன்ன திருவிளையாடல்கள் புரிந்துள்ளான் என்பதை நன்கு அறிந்த பின்னர் வழிபாடு செய்வது மிக்கநலம் தருவதாகும். அம்முறையில் இத்திருக்கோயிலைக் கட்டி புறங்காத்த மாமன்னன் பராக்கிரம பாண்டியன் இத்திருக்கோயிலின் பால்கொண்டிருந்த பற்றுதலை உலகறியச் செய்து இறை வழிபாட்டில் மக்களிடம் ஒரு பற்றுதலை ஏற்படுத்தும் நோக்குடன் இத்தலத்தின் புராணம், கலை, வரலாற்றுச் சிறப்புகளை வெளிப்படுத்தும் கலையழகு சமய உணர்வுமிக்க சிற்பங்களின் படங்கள் தாங்கி இப்புத்தகம் வெளியிடப்பட்டுள்ளது. அன்பர்கள் இப்புத்தகத்தை வாங்கிப் படித்து எல்லா நலன்களும் பெற்றுய்வார்களாக.

இப்புத்தகம் வெளியிட ஆதரவும் அனுமதியும் தந்து ஊக்குவித்த தமிழ்நாடு அரசு

அறநிலைய ஆட்சித்துறை மாண்புமிகு அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்களுக்கும் ஆணையர் திரு. யு. சுப்ரமணியன் ஐ. ஏ. எஸ். அவர்களுக்கும் துணை ஆணையர் திரு. வி. எஸ். கோதண்டபாணி பி.எஸ்ஸி; பி.எல். அவர்களுக்கும் எங்களது பாராட்டைத் தெரிவித்து நன்றி செலுத்துகிறோம். இப்புத்தகத்தில் படங்கள் அச்சிட 'ஆர்ட் பேப்பர்' காணிக்கையாகக் கொடுத்த தென்காசி முருகன் டிம்பர் டிப்போ உரிமையாளர் திரு. ஏ. கே. சுப்புக்கனி நாடார் அவர்களுக்கும் இத்தல புராணத்தை தொகுத்து தந்து உதவிய திரு. சி. பாலபகவதி பட்டருக்கும் எங்களது பாராட்டுக்கள்.

1. திரு. பி. எஸ். எம். சுவாமி பி. ஏ.
   அறங்காவலர் குழுத்தலைவர்

2. திரு. எம். பி. சண்முகம்
   பி. ஏ. பி. எல். அறங்காவலர்

3. திரு. டி. கே. அனவரதம்
   பி. ஏ. பி. எல். ,,

4. எம். சுப்பிரமணியம்
   பி. ஏ. பி. எல். ,,

5. திரு. டி. எஸ். கந்தசாமி ஆச்சாரி ,,

ஆ. இளையபெருமாள் பி. காம்.
செயல் அலுவலர்

ஆராய்ச்சி அணிந்துரை

(புலவர் எஸ். முத்துராமன் எம். ஏ; பி. லிட்.)

முன்னுரை என்பது கட்டிய மாளிகைக்குத் தோரண வாயில் அமைப்பது போல தோரண வாயிலின் அழகினைப் பார்த்தே மாளிகையின் உட்புறத்தை அளந்து விடலாம்

பாண்டியன் கனவு என்ற தென்காசிச் சிற்பப் பெருங்கோயிலின் வரலாறு கி. பி. 14-ம் நூற்றாண்டில் தொடங்கி 20-ம் நூற்றாண்டினை எட்டிப்பிடித்திருக்கிறது. இந்த அறுநூறு ஆண்டின் வரலாறு இந்தச் சிறிய இதழில் சுருக்கமாக விளக்கப்பட்டுள்ளது.

பல்லவர் கண்ட கனவு மாமல்லைக் கடற்கரைச் சிற்பங்களை தமிழுலகிற்கு உருவாக்கித்தந்தது.

ராஜராஜ சோழனின் கனவு தஞ்சைப் பெருவுடையார் திருக்கோயிலை வழங்கியது

ஸ்ரீகிருஷ்ணதேவராயரின் கனவு ஸ்ரீவில்லிப்புத்தூர் மாடமதுரையின் கூட கோபுரங்களை எழுப்பியது.

அரிகேசரி பராக்கிரம பாண்டியன் கண்ட கனவு இந்தச் சிற்பப்பூங் கோயிலையும்-தென்காசித் திரு நகரத்தையும் சித்திரப்புனல் கங்கை வழிந்தோடும் புண்ணிய பூமியாக இதனை மாற்றியது.

மனத்தால் வகுக்கவும் எட்டாத கோயிலை வகுத்து
ஓங்கு நிலைஒன்பது உற்ற திருக்கோபுரமும்
பாங்கு பதினொன்று பயில் தூணும்-வகுத்து

ஒரே கல்லில் உருவாக்கப்பட்டு-ஒப்பற்ற கலைக் களஞ்சியமாகத் திகழும் சிற்ப ஓலக்க மண்டபம் பாண்டியர், நாயக்கர், விஜயநகர வேந்தரின் கூட்டுக்கலை முயற்சியின் வெளியீடாக காட்சியளிக்கிறது.

அந்தணர்கள் குடியிருப்புக்களாக ஐந்து அகரங்களை (மேலகரம், நன்னகரம், நயினாரகரம், அகரம் விண்ணகரம்) நிறுவப்பட்டது.

சிவதீட்சை–சித்தவித்தை சமய சாத்திரங்கள் சைவ ஆக மங்கள்-புராண இலக்கியங்கள் கற்பிக்க பாண்டியர் கண்ட **'பல்கலை மடங்கள்'** எட்டுத் திசைகளிலும் (திருக்கோவில் ரதவீதியில்) நிறுவப்பட்டன.

தேவார இசை தமிழ்ப்பண்களை பயிற்றுவிக்க காஞ்சீபுரத்திலிருந்து திருமுறை ஓதுவார்கள் வரவழைக்கப்பட்டனர்.

காளையார்கோவிலிலிருந்தும்- வேம்பத்தூரிலிருந்தும் சைவ ஆகம பண்டிதர்கள் வந்தார்கள்.

கலைமாதர்கள்-நாட்டிய வல்லார்களுக்கு வீடும்-தெருவும் ஏற்படுத்தப்பட்டது (கல்வெட்டு: 508)

புராண–இலக்கியங்களை போதிக்கும் ஆசான்களுக்கு நிலங்கள் நிவந்தமாக வழங்கப்பட்டன (கல்வெட்டு:523)

விஜயநகர வேந்தன் அச்சுத தேவராயனுக்கு சீமாறன் சீவல்லபன் திருமகளைத் திருமணம் செய்து கொடுக்க அவன் இத்திருக்கோயிலின் உள்ளே நடுக் கோவிலை திருமாலுக்காகக் கட்டி வழங்கினான்.

முதலில் இருந்த திருச்சுற்றுக்கள் பெரிதாகப்பட்டு உலகமுழுதுடையாள் கோவில் பின்பு முன் மண்டபம் போன்றவற்றை கட்டினர்.

காசி கண்ட பராக்கிரம பாண்டியரின் வழிவந்தவர்கள் மேலும் நிவந்தங்கள் வழங்கியும சேரர் போன்றோரின் நிலதானங்களும் இக்கோவிலுக்கு உரியனவாகும்.

காசிகாண்டம், பிரமோத்திர காண்டம், நைடதம், தத்துவப்பிரகாசம், சித்தவித்தை போன்ற நூல்களும்,

சிவபெருமான் பதிகம் மற்றும் ஸ்தலபுராணங்களும் வளர்ந்தன.

இத்திருக்கோவிலை மையமாகக் கொண்டு இன்று ஒருவர் மதுரைப் பல்கலைக்கழகத்தில் (முனைவர் பட்டத்திற்கு) பதிவு செய்து ஆய்வு செய்து வருகிறார்.

கங்கைத் தெற்கே ஓடுகிறது (அகில இந்திய வானொலி) நாடகமும்.

பாண்டியர் கண்ட பல்கலைமடங்கள் (ரேடியோ உரை)

பாண்டியர் வளர்த்த பழம்பதிகள் (உரைகளும்) மற்றும் ஐந்து அகரங்கள் விந்தன் கோட்டை போன்ற ஆய்வுக்கட்டுரைகளும் இக்கோயில் ஒரு ஆய்வுக்களமாக விளங்கி வருவதைக் காட்டுகின்றன.

இவ்வளவு நீண்ட வரலாற்றினைத் தெளிவாகவும் சுருக்கமாகவும் உரைப்பதில்தான் இச்சிறிய நூல் வெற்றி பெற்றிருக்கிறது.

நமது திருக்கோவில் வரலாறுகளைப் பலர் புராணங்களைப் போலவே எழுதியிருக்கின்றனர். நம்மவர்கள் வரலாற்றுக் குறிப்புக்களுக்கு அவ்வளவு முக்கியத்துவம் கொடுப்பதில்லை.

இந்த நூலில் புராணச் செய்திகள் வரலாறு கல்வெட்டுக்கள்- கோயிலின் அமைப்பு (தரைப்படம்) ஆகியவற்றைத் தனித் தனியாக வெளியிட்டிருப்பது இதன் சிறப்பாகும்.

ஆய்வுக்குப் பயன்படும் விதத்தில் கல்வெட்டுக்கள் அழகிய செய்யுட்களாகபடி எடுக்கப்பட்டு தரப்பட்டுள்ளன.

இத்திருக்கோவில் தொடர்பாக வேறு பகுதிகளில் காணப்படும கல்வெட்டுக்களையும் வழங்கியுள்ளனர்.

கலை நோக்கில் சித்திரம் முதற்படி சிற்பம் இரண்டாவது நிலை. சித்திரங்களை வரைந்த பின்பே சிற்பங்கள் உருவாக்கப்படுகின்றன. இக்கோவில் சிற்பங்களை புகைப் படம் எடுத்துப் போட்ட முன்னைய பிரிதிகளில் தெளிவு-அழகு புலப்படாமல் போனகாரணத்தினால் இச்சிற்பங்களை சித்திரங்களாகவே வரைந்து இப்பதிப்பில் வெளிக் கொணரப்படுகிறது

மிகவும் குறுகிய காலத்தில் இவைகளை நிறைவேற்ற எண்ணும் துடிப்புணர்ச்சியும் இச்சிறிய மலரை உருவாக்குவதில் உள்ள ஆர்வமும் அச்சுப்பிழைகளை தவிர்க்க இயலாமல் ஆகிவிட்டது. அதற்காக பிழைதிருத்தம் பற்றிய அனுபந்தமும் தனியாக இணைக்கப்பட்டுள்ளது.

மொத்தத்தில் இது ஒரு ஆய்வு ஏடாக-கலைக்களஞ்சியமாக கல்வெட்டுக்களின் குறிப்பாக சிற்றிலக்கியச் செல்வமாக பாண்டியன் கண்ட கனவினை நிறைவேற்றும் அறை கூவலாக உங்கள் பொற்கரங்களில் தவழ்கிறது.

அன்னை பராசக்தி அருட்கடைக்கண்
காட்டுகிறாள்!
இன்னும் ஒரு புது உலகம் - இங்கே
பிறக்கட்டும்!

உ

சிவமயம்

தென்காசி
அருள்மிகு காசிவிஸ்வநாதசுவாமி கோயில்
வரலாறு



விநாயகர் துதி

மண்ணுலகத்தினிற் பிறவி மாசற
எண்ணிய பொருள் எல்லாம் எளிதில் முற்றுறக்
கண்ணுதலுடைய தோர் களிற்று மா முகப்
பண்ணவன் மலரடு பணிந்து போற்றுவாம்.

விசுவநாதர் துதி

உலகதினேற்ற மான உவணமால் அன்ன ஊர்தி
யிலகிவர் மனவாக்கிற்கு மெட்டொணு வருகை காட்டி
பலன்மிகு தரு தென்காசிப்பதிவளர் புனல் சேர்சென்னி
நலனுந் விசுவநாதர் நறுமலர் கழலுட் கொள்வாம்.

லோகநாயகி துதி

முருகோங்கு குழலாளை சிந்துர நன்னுதலாளை முதுமின்
ஞேக்காற்
கரு வோங்கி குடி தழைய அருள் சுரந்து மடை திறந்த
கண்ணினளை
யுரு வோங்கு களப மணி முலையாளை கொடியிடை
பட்டுடையினளை
மரு வோங்கு பதத்தாளைத் தென்காசி உலகாளைமனத்துள்
வைப்போம்

உ



இறைவன் பெயர்:- **காசிவிஸ்வநாதர்**

இறைவியின் பெயர்:- **லோகநாயகி**

தல விருக்ஷம்:- **செண்பகமரம்**

தீர்த்தம்:- **காசித்தீர்த்தம், சித்ரா நதி மூக்கூடல் தீர்த்தம்.**

தலப் பெருமை:-

அருள்மிகு காசி விசுவநாதரையும் உலக நாயகியையும் வழி படுவதால் துன்பம் நீங்கும் இன்பம் பெருகும் தீமை ஒழியும். பகைமை மாயும் பசி, பிணி நம்மை விட்டு ஓடும் செல்வம் பெருகும். வெற்றி கிடைக்கும். மாய்ய அழியும். அறிவு வளரும். ஞானம் பிறக்கும. இறைவன் திருஅருள் கூட்டும் வீடு (மோட்சம்) உண்டாகும்.

இந்நூல் எழுதுவதற்கு உறுதுணையாக நின்ற வழி காட்டி நூல்கள்:-

1. 1926ல் அச்சு பதிக்கப்பட்ட அழகிய சிற்றம்பல தேசிகரால்" எழுதப்பட்ட தென்காசி தலபுராணம்.
2. 1951ல் திருக்கோயில் வெளியீடாக திருவாளர் இ. மு. சுப்பிரமணிய பிள்ளை அவர்களால் எழுதப்பட்ட கோயில் வரலாறு மற்றும் 1964-தல வரலாறு 6-வது பதிப்பு.

3. திரு. இ. மு. சுப்பிரமணிய பிள்ளை அவர்களை ஆசிரியராகக் கொண்டு 1962ல் அரசு வெளியீடாக வந்த "நெல்லை மாவட்ட கோயில் வரலாறு".

4. மதுரை நாயக்கர் வரலாறு—பரந்தாமனார் எழுதியது.

5. சதாசிவ பண்டாரத்தார் எழுதிய "பாண்டியவரலாறு"

6. ஆழ்வார்குறிச்சி பரமகல்யாணி கல்லூரி 1977 SHOOL MAGAZINEல் வெளி வந்த தென்காசி வித்வான் திரு. இலக்குமி நாராயணன் அவர்களது ஆராய்ச்சிக் கட்டுரை.

1வது பகம் **பொது**

அ) **சமயம்:** இந்திய பண்பாட்டின் வரலாறு 5000 ஆண்டுகளுக்கும் முற்பட்டது அதிலும் தமிழர் பண்பாடு இந்திய நாகரிகத்தின் அடிப்படை முன்னோடி ஆகும். உலக சமுதாயத்தினர் தங்கள் தங்களுக்கு என சமயங்களை, மதங்களை ஏற்றுக் கொண்டு அதன் வழியில் நடந்தனர். அதுபோல இந்திய மக்களும் தங்களுக்கென பல சமயங்களை பின் பற்றினர். பின் பற்றி வந்த அத்தனை சமயங்களிலும் காலத்தாலும், வரலாற்றினாலும் முற்பட்டது. இந்துசமயம். இந்து சமயம் "அறுவகைச் சமயம்" என வழிபடும் முறையால் பிரித்து உணரப்பட்டது.

"அறிவினால் மிக்க அறுவகை சமயத்து
அவ்வர்க்காங்கே ஆறருள் புரிந்து"

என தேவாரத்தில் சொல்லப்பட்டபடி
சிவனை பிரதானமாக வழிபடுவது சைவம் என்றும்
சக்தியை பிரதானமாக வழிபடுவது சாக்தம் என்றும்
கணபதியை பிரதானமாக வழிபடுவது கணாபத்யம் என்றும்
சூரியனை பிரதானமாக வழிபடுவது சௌரம் என்றும்
விஷ்ணுவை பிரதானமாக வழிபடுவது வைனவம் என்றும்
முருகனை பிரதானமாக வழிபடுவது கௌமாரம் என்றும்
கொள்ளப்பட்டது.

மேற்படி அறுவகை சமயங்களுக்கும் பொதுவாக அருவுருவாகிய சிவலிங்க வழிபாடு விளங்கிற்று பெரும் சமயமாகிய இந்து சமயத்தின் ஆறு பகுதிகளாக அறு சமயங்களும் விளங்கி வந்தன,

முழு முதற் கடவுளின் உண்மையும் தன்மையும் உணர்ந்து அவரை அருவுருவமாக வழிபட நினைத்த தமிழர் அவருடைய எட்டு குணங்களையும் நினைந்து அவரைத் தொழுதனர். இந்த நெறியே தமிழர்களின் செந்நெறி ஆகும். அது திருவள்ளுவத்தின் கடவுள் வாழ்த்தில் குறிக்கப்பட்டது. கடவுள் வாழ்த்து அதிகாரத்தில் முதல் எட்டுத் திருக்குறள்களிலும் இறைவனின் எண் குணங்களையும் முறையே கூறி ஒன்பதாவது குறளில் எண் குணங்களையும்.

"கோளில் பொறியில் குணம் இலவே எண் குணத்தான்
தாளை வணங்காத்தலை" என தொகுத்துக் காட்டி

பத்தாவது குறளில் இறை வழிப்பாட்டின் முக்கியத்தையும் வற்புறுத்தினர். வான் சிறப்பு என்ற இரண்டாவது அதிகாரத்தில் கடவுள் திருவருளினால் நடைபெறும் தொழிலை "மழையில் வைத்துக் கூறினர் இறைவனை அருவ, உருவ வழிப்பாட்டில் வழிபடலாம் என்பதை கடவுள் வாழ்த்து அதிகாரத்தில் "தாள்" அல்லது "அடி" என்ற சொல்லை வழங்கினர். உருவ வழிப்பாட்டினையும் அருவ வழிப்பாட்டினையும் இந்து சமயம்-தமிழர் சமயம் ஏற்றுக் கொண்டது. அருவ, உருவமாக "சிவலிங்க" வழிபாடு தொடரலாயிற்று. சிவம் என்ற சொல்லுக்கு மங்களம் நன்மை என்று பொருள். (சிவப்பு என்றும் கொள்ளலாம்) இந்து சமயத்தின் பிரிவுகள் உலகெங்கும் பரந்து கிடந்த காலமும் உண்டு. கம்போடியாவில் வைணவமதம் 12-ம் நூற்றாண்டிலும், 4-ம் நூற்றாண்டில் கிழக்கிந்திய தீவு-போர்னியோவிலும் இந்து சாம்ராஜ்யங்களும் பேணப் பட்டு வந்தது. சிவபெருமான் ஆடுவதும் உமையம்மை

தாளம் போடுவதும் சங்ககால தமிழ் இலக்கியமாகிய "கலித் தொகை"யில் வருணிக்கப்படுகிறது. அந்தப் பாடல்.

மண்டமர் பலகடந்து மதுகையால் நீறணிந்து
பண்டரங்க மாடுங்காற் பணையெழி லணைமென்றோள்
வண்டற்றுங் கூந்தலாள் வளர்தூக்குத் தருவாளோ.

அண்டங்களின் அரசராகிய கடவுள் இருக்கும் இடம் கோயில் என கொள்ளப்பட்டது.

கோயில் அமைப்பும் தத்துவமும்:

ஆன்மாலயித்திருக்கும் இடமாகிய ஆலயத்தைமனித அவயங்களின் பாகங்களாக சைவசித்தாந்தம் கீழ்க்கண்ட வாறு கூறியது.

கர்ப்பகிரகம்	—	சிரசு
அர்த்த மண்டபம்	—	முகம்
அந்தரான மண்டபம்	—	கழுத்து
மகா மண்டபம்	—	மார்பு
மணி மண்டபம்	—	வயிறு
உட் பிரகாரம்	—	தோள்கள்
வெளி பிரகாரம்	—	கைகள்
இருபிரகார இடைவெளி	—	விலாப்புறங்களுக்கும் கைகளுக்கும் உள்ள இடைவெளி.
பிரகார பல கணிகள்	—	செவிகள்
விக்ரகம்	—	ஆன்மா
கர்ப்பகிரக நிலை தூண்கள்	—	கண்கள்
அன் நிலை மேலுள்ள கல்	—	நாசி
சுவர் கற்கள்	—	எலும்புகள்
தூண்கள்	—	நரம்புகள்
கோபுரம்	—	ஸ்தூவலிங்கம்

ஏழு மதில்கள்	—	இரதம்! இரத்தம் எலும்பு, சுக்லம், சதை தோல், மூளை என்ற தாதுக்கள்.
ஐந்து மதில்	—	அன்னமயம். பிராண மயம், மனோமயம் ஞானமயம் ஆனந்த மயம் என்றகோசங்கள்
மூன்று மதில்	—	ஸ்தூல,சூக்ஷ்ம காரண சரீரங்கம் இத்தனை தத்துவங்களை அடங்கி இருப்பது.

சுற்றுப்புறமும்:- மலைகள், ஆறுகள், நீர் நிலைகள்:

மேற்குத் தொடர்ச்சி மலைக்கு அருகில்,' நெல்லை மாவட்டத்தில் அமைந்துள்ளது தென்காசி. இந்நகர் பொதிகை மலையின் அடிவாரத்தில் பட்சி நாயக்கன் பொற்றை, வாலியம் பொற்றை, திருமலை முதலிய குன்று களால் சூழப்பட்டுள்ளது திரிகூடமலையில் உற்பத்தியாகி தேனருவி, செண்பகாதேவி அருவி, பொங்குமாங்கடல் வட அருவியாகிய, 'குற்றால நீர்வீழ்ச்சியாக வழிந்து திருக் குற்றால நாதர் திருக்கோயில் வழியாக தென்காசிக்கு வரு வதே சிற்றாறு; என்ற சித்ரகங்கை. பழைய குற்றாலத்தி லிருந்து வரும் காட்டாறு ஆகிய அழகன் ஆறு பல குளங் களுக்கும் பாய்ந்து மணி கருணிகை தீர்த்தத்திற்கு கிழக்கே சிற்றாறில் சேர்கிறது. ஐந்தருவி நீர் சிறு ஆறாக ஓடி வந்து திரு இலஞ்சி குமரர் கோயில் அருகே சிற்றாற் றில் சேர்கிறது தலைமலை ஐயனாறு, சதாசிவநதி எனப் படும் செங்கோட்டை ஆற்றில் கலந்து சிவமது கங்கை எனும் சிற்றாற்றில் தென்காசி முக்கூடலில் சேர்கிறது. இங்கே தேனாறு ஆகிய செங்கோட்டை நதி, பாலாறு ஆகிய குற்றால ஆறு, ஊற்றாறு ஆகிய பாதல நதி ஆகிய மூன்றும் கூடி முக்கூடல் ஆகிறது இது ஒரு முக்கிய தீர்த்தம் ஆகும். சிற்றாறு முக்கூடலில் இருந்து நேரே கிழக்காக சிறிது தூரம் ஓடி பின் நேர் தெற்கே திருபி

வளைந்து மறுபடியும் கிழக்காக ஓடுகிறது. தென்காசியை சூழப்பல சிறு சிறு குளங்கள் காணப்படுகின்றன. அவைகளில் முதன்மையானவை சீவலப்பேரி, சாலப்பேரி, இடைமலைக் குளம் என்பன. மேலகரக்காலும், புலியூர் காலும் சிற்றாற்றில் இருந்து பிரிந்து தென்காசி ஊரைச் சேர்ந்த அளவிலா நஞ்சை நிலங்களை வளப்படுத்துகின்றன. தென்காசிக்கு மேற்கும் கிழக்கும் இரண்டு பாலங்கள் உள்ளன. மேற்கே குற்றாலச் சாலையில் சிற்றாற்றின் மேல் இருப்பது யானைப் பாலம் கிழக்கே திருநெல்வேலி சாலையில் இருப்பது சங்கிலிப் பாலம் (இப்போது பெயர் இரும்புத் தண்டி என்ற வாய்க்கால் பாலம்).

மடங்கள்: காசிவிசுவநாதர் கோயிலைச் சுற்றி எட்டு மடங்கள் நிறுவப்பட்டிருந்தன.

கீழ்த்திசையில் — அரசருக்கு முடிசூட்டும் வைபவத்தில் கலந்து கொள்ளும் பெருமை பெற்ற சன்னதிமடம்.

தென் திசையில் — சிவ ஆகமம் ஓதி உணரவேண்டி நிறுவப்பட்டிருந்த அகோர தேவாதீன மடம்.

தென் கீழ்திசையில் — கல்வி பயின்று உணர நிறுவப்பட்டிருந்த துர்வாசர் ஆதீனம் எனும் வேம்பத்தூர் மடம்.

தென் மேற்கு திசையில் — சிவபுராணம் கேட்டுய்ய பௌராணிக ஆனந்த கூத்தர் ஆதீன மடம்.

மேற்கு திசையில் — தத்துவ விசாரணைக்கு தத்துவ பிரகாசர் ஆதீன மடம்.

வட மேற்கு திசையில் — ஞானதீக்ஷை பெற மெய் கண்டார் ஆதீன மடம்.

வட திசையில் — சைவருக்கு உபதேசம் செய்வதற்கு 'உமையொரு பாக' ஆதீன மடம்.

வட கீழ்த்திசையில் — சிவ யோகிகள் தவம் செய்ய 'இடிவலஞ்சுழி பரஞ்சோதி ஆதீன மடம்.

நிறுவப்பட்டிருந்தவை பேரளவில் இல்லாமல் பெயரளவில் உள்ளன.

அருகில் உள்ள தலங்கள்:

1. திருக்குற்ருலம்:- தென்காசிக்கு மேற்கே சுமார் 3 மைல் தொலைவில் குற்ருல நீர் வீழ்ச்சியின் அருகே அருவிக்கரை ஆலயமாக திகழ்வது குற்ருல நாதர் ஆலயம். அகஸ்திய மகரிஷி வழிப்பட்ட தலம். பாடல் பெற்ற பழம்பெரும் பதி பஞ்ச சபையில் (திருவாலங் காட்டில் இரத்னசபை, சிதம்பரத்தில் கனகசபை, மதுரையில் வெள்ளியம்பலம் எனப்படும் ரஜத சபை, திருநெல்வேலியில் தாமிரசபை, குற்ருலத்தில் சித்ரசபை) ஒன்ருகிய சித்ரசபை ராஜராஜேஸ்வரி சக்தி பீடமாய் மகாமேரு சொரூபதரணி பீடமாய் வீற்றிருப்பதும் இத்தலமே.

2. இலஞ்சி:- இலஞ்சி குமாரர் ஆலயம் சோலையின் நடுவில் இருப்பது. கலியுகக் கடவுள் கந்தனின் சிறப்பு மிக்க தலம். தென்காசியிலிருந்து இரண்டு மைல் தொலைவில் உள்ளது.

3 பண்பொழில்:- பைம்பொழில் திருமலைக் கோயில் குன்றில் மீதமர்ந்த குமரன் தலம். போவதற்கு பேருந்து உண்டு. படி ஏறிச் சென்று பயன் பெற வேண்டிய தலம் மாதக் கார்த்திகை தினத்திலும் மாதாந்திர கடைசி வெள்ளிக் கிழமையிலும் பல பக்தர்கள் கூடுவர். தென்காசியிலிருந்து ஏழு மைல் தூரத்தில் உள்ளது.

நகரில் உள்ள இதரகோயில்கள்:

1. விநாயகர் கோயில்கள்:- எட்டு விநாயகர் கோயில்களை பிரதானமாகக் கொண்ட தென்காசியின் ஊரின் நடுவே காசி விசுவநாதர் ஆலயம் உள்ளது.

"கன்னிசுதன் சுந்தரக யத்தன் செண்பகச் சேய்
மின் வெயிலுகந்த பிள்ளை வேண்மும் பலச் சேய்
மன்னு மெர்ப்பனைச் சுதன் வயங்கபி டேகச் சேய்
யின்னருள் மெய் கண்ட பிள்ளை யெண்மர்
பிள்ளையாரும்"

என தென்காசி தலபுராணத்தில் சொல்லப்பட்டபடி

கன்னி விநாயகர்
சுந்தர விநாயகர்
செண்பக விநாயகர்
வெயிலுகந்த விநாயகர்
அம்பல விநாயகர்
ஓப்பனை விநாயகர்
அபிடேக விநாயகர்
மெய்கண்ட விநாயகர்

என ஊரை சுற்றி எட்டு விநாயகர் கோயில்கள் நிறுவப் பட்டுள்ளன. மேலப்புலியூர் சித்ரா நதி அணைக்கரையில் விநாயகர் கோயில் உள்ளது. இங்கே காசிவிசுவநாதர் திருக்கோயிலிலிருந்து சுவாமி சந்திரசேகரர் குதிரை வாகனத்தில் புறப்பட்டு பரிவேட்டை விழா சிறப்பு பூஜை கள் நடத்தப்பட்டு திரும்புவார். விண்ணவரம் பெருமாளும் இவ்விழாவில் கலந்து கொள்வார்.

கீழப்புலியூரில் உள்ள வலம்புரி விநாயகர் என்ற புலிக்குட்டி விநாயகர் மிகவும் சக்தி வாய்ந்ததாக போற்றப்படுகிறது.

முருகன் கோயில்கள்

பழனி ஆண்டவர் கோவில்கள் இரண்டு உள்ளன. ஒன்று யானைப்பாலம் அருகே 'தென்பழனி ஆண்டவர்" என வீற்றிருக்கிறார். இங்கு தைப்பூச விழாவை நகர வியாபாரிகள் சிறப்புடன் நடத்தி வருகின்றனர் இத் திருக்கோவில் சண்முகப் பெருமான் கந்த சஷ்டி ,விழாவில் சுவாமி விசுவநாதர் கோவிலில் இருந்து புறப்படும் சுப்பிர மணியருடன் கலந்து சூரசம்ஹாரம் நடத்துகிறார்.

மற்றுமொரு பழனி ஆண்டவர் கோவில் சுப்பையா கோவில் என்று அழைக்கபபடுகிறது கிழக்கே மலையாந் தெருவில் இக் கோயில் அமையப் பெற்றுள்ளது. இங்கே கார்த்திகை மாதம் குமார சஷ்டி 10 நாள் உற்சவம் சிறப் புடன் நடத்தப்படுகின்றது.

சிவன் கோயில்

1) காசிவிசுவநாதர் ஆலயம்

2) குலசேகரநாத சுவாமி கோயில் இத்திருக் கோயில் தென்காசியிலிருந்து திருநெல்வேலி செல்லும் சாலையில் அரசு மருத்துவமனைக்கு அருகில் உள்ளது. ஜடிலவர்மன் ஸ்ரீவல்லப தேவனால் கட்டப்பட்டது. சுவாமி குலசேகரமுடையார் கோயிலும் அதன் வடக்கு அம்மை குழல்வாய்மொழி நங்கையின் கோயிலும் தனித்தனியே உள்ளன. கருவறை அர்த்தமண்டபம், மகாமண்டபம், மணி மண்டபகங்கள் உள்ளன. கோபுர வாசலைத்தாண்டியது உள்ளே திரிகூட மண்டபம் உள்ளது. இதன் வடக்கேயுள்ள திருக்கல்யாண மண்டபம் இடிந்த நிலையில் உள்ளது. கருவூல அறையிலிருந்து செல்லும சுரங்கவழி காசிவிசுவநாதர் கோயிலைச் சென்றடைவதாகக் கூறப்படுகிறது. கோயில் பிரகாரங்களில் தற்போது தென்னங் கன்றுகள் வைத்து நடப்பட்டுள்ளன.

உலகநாத பாண்டியன் என்பானின் தவச்சாலையாகவும் பின்னர் அன்னை லோகநாயகி உலகநாத பாண்டியனுக்கு மகளாக-குழல்வாய்மொழியாகப் பிறந்து இறைவனை மணமுடிக்கும் திருமணச்சாலையாகவும் அமைந்து பெருமை பெற்றது.

சுவாமி கோயில் மணி பண்டபத்தில் வரையப்பட்டுள்ள அழகிய ஓவியங்களின் காலம் எவருக்கும் தெரியவில்லை. சுமார் 400 ஆண்டுகள் ஆகலாம் என்று கருதப்படுகிறது. இன்னும் அதன் வண்ணக்கலவை பார்ப்பவர் மனதில் ஓர் வியப்பை ஏற்படுத்துகிறது.

சிதம்பரேஸ்வரர் ஆலயம்:-

கீழப்புலியூர் ரயில் நிலையத்திற்கு சற்று மேற்கில் உள்ளது இது கட்டிய காலமும் அரசரும் அறிய முடியவில்லை. சகாப்தம் 1469 கி.பி. 1546-ல் குலசேகர பராக்

கிரமன் காலத்தில் புலியூர் பஞ்சாயத்தாரால் நிலம் அளிக்கப்பட்டதாகக் கல் வெட்டு ஒன்று குறிப்பிடுகிறது சகம் 1526-1530 கி.பி 1603—1607-ல் வழி பாடுகளுக்காகவும் கோயில் பழுது பார்க்கவும் செங்கோட்டையில் நிலம் அளித்ததாக இன்னொரு கல்வெட்டு கூறுகிறது. இக்கோயில் கர்ப்பகிரகம் அர்த்த மண்டபம், மகா மண்டபம், மணி மண்டபம் பிரகாரச்சுவர்களுடன் விளங்குகிறது. சுவாமி கோயிலுக்கு வடக்கே அன்னை சிவகாமி கோயில் தனியே உள்ளது. 5—7—1965ல் பொதுமக்கள் உதவியால் கும்பாபிசேகம் நடைபெற்றது

சங்கரநாராயணன் கோயில்
மேல சங்கரன் கோவில்

இத் திருக்கோயிலும் இவ்வூரில் இரண்டு உள்ளது. ஒன்று யானைப்பாலம் அருகே மேல சங்கரன் கோவில் என்பது. இத்திருக்கோவிலில் காசி விசுவநாதர் ஆலயத்தின் பராமரிப்பிலும் உள்ளது. இத்திருக்கோவிலில் ஆடி மாதம் தபசு உற்சவம் நடத்தப்படுகிறது. தபசுக்காட்சி தெற்கு ரதவீதியில் நடத்தப்படுகிறது. கிராமப்புற-நகர்ப்புற மக்கள் பெருமளவு கூடி வழிப்பட்டு பயன் பெறுகின்றனர்.

கீழச் சங்கரன் கோவில்

சொக்கர் தெருவில் உள்ளது. இங்கும் ஆடி மாதம் தபசு உற்சவம் நடத்தப்படுகிறது. செங்குந்தர் எனப்படுர். சமுதாயத்தினரால் இத்திருக்கோயில் சிறப்புற நடைபெறுகிறது. தவசு காட்சி மட்டப்பாத் தெருவில் நடைபெறுகிறது.

சாஸ்தா கோவில்கள்:

'குளத்தூராயன்' என அழைக்கப்படும். சாஸ்தா கோவில் பொன்னிப்பாறை சமீபம் விஸ்வகர்மாக்கள் தெருவில் உள்ளது. சம்பாத் தெருவில் ஒரு சாஸ்தா

கோவிலும் உள்ளது. காசிவிசுவநாதர் கோயிலுக்குப் பாத்தியப்பட்ட நஞ்சை நிலத்தில் 'கீழமாரி ஐயனார் கோவில் உள்ளது. இங்கு வருடம் இரு முறை விசேட பூஜை நடத்தப்படுகிறது. (அறுவடைக்குப் பின்) தவிர சனி, புதன் வாரம் இருநாளில் பூஜை நடைபெறுகிறது.

பெருமாள் கோயில்கள்:

1. சித்ரா நதிக்கரையில் பொருந்தி நின்ற பெருமாள் உள்ளது. இது சுவாமி விசுவநாதர் கோவிலில் முன்பு இருந்து பின் பாண்டியர் காலத்தில் இந்த இடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டதாக தெரிகிறது. இங்கு மார்கழி மாதம் வைகுண்ட ஏகாதசி, திருவெம்பாவை விழா-சிறப்புடன் நடைபெறுகிறது.

2. விண்ணீவரம் பெருமாள் கோவில்:- சகம் 1486 கி.பி. 1565ல் அதிவீரராம ஸ்ரீவல்லப தேவர் இக்கோயில் கட்டினார். அரசு மருத்துவமனைக்கு அருகில் உள்ளது சுவாமி காசிவிசுவநாதர் கோவில் பராமரிப்புக்கு உட்பட்டது. இத் தலத்தில் கல்யாண மண்டபம் ஒன்று உள்ளது. பொது மக்கள் திருமணம் நடத்த வசதியான இடமாக அமைந்துள்ளது.

3. அனைக்கரை தெருவில் வெங்கிடாசலபதிகோவில் புதிதாக கட்டப்பட்டுள்ளது.

4. புதுத் தெருவில் உள்ள கிருஷ்ணன் கோவில் சிறிய கோவிலாக இருந்தாலும் அக் கிராமத்தில் சிறப்புடன் வழிப்படப்படுகிறது. மார்கழி மாதம் 'புஷ்பாஞ்சலி' சிறப்புடன் நடைபெறுகிறது.

5. ராமபிரானின் பாதத்தை மூலஸ்தனமாகக்கொண்ட பெரியசாமி கோவிலும் இரண்டு உள்ளது. இங்கு பூச் சொரிதல் உற்சவம் சிறப்புடன் நடைபெறுகிறது.

சக்தி கோவில்கள்

1. முத்தாரம்மன் கோவில்

2. மாதாங் கோவில்கள் அந்தப் பெயர் உடைய தெருவில் உள்ளன. கொடை விழாக்கள் தை பங்குனி மாதங்களில் நடைபெறுகின்றன.

3 மாதாங்கோவில் தெருவில் உள்ள அங்காள பரமேஸ்வரி ஆலயத்தில் மகாசிவராத்திரி 4-ம் கால பூஜை நேரத்தில் 'அலகு நிறுத்துதல்' என்ற வைபவம்' நடைபெறுகிறது. குடத்தின் பக்கவாட்டு விளிம்புப் பகுதியில் ஆலயத்தின் 'பூஜைவாள்' தெய்வீக சக்தியால் தலைகீழாக நிறுத்தப்படுகிறது.

4. வடக்கு சொக்கர் தெருவில் 'திரிபுர சுந்தரி' ஆலயத்திலும் தைப் பூசத்தன்று இம்மாதிரி 'அலகு நிறுத்துதல்' நடைபெறுகிறது.

5. தம்பிராட்டி அம்மன் கோவில் என சக்திவாய்ந்த கோயில் கீழப்புலியூரில் உள்ளது. சித்திரை மாத உற்சவம் சிறப்புற நடைபெறுகிறது. அப்பகுதி மக்களால் குல தெய்வமாக வணங்கப்படுகிறது.

6. **அரசூர் நங்கை அம்மன் கோவில்:** எல்லார் சாமி நாயுடு பாளையம் தெருவில் உள்ளது. அரிகேசரி பாண்டியனால் கட்டப்பட்டது. இங்கே அன்னை லோக நாயகியே வடக்குவாய் செல்வியாக வீற்றிருக்கிறாள். காசிவிசுவ நாதர் கோயிலின் உபகோயிலாக உள்ளது.

7. அணைக்கரைத் தெருவில் எக்காலி தேவியம்மன் கோவில் உள்ளது.

இதர கோவில்கள்

தெப்பக்குளத் தெருவில் மயக்ககார மாடசாமியும், இரும்புதாண்டி பாலம் அருகில் கருப்பசாமியும், சம்பாத்

தெருவில் மாடசாமியும், இரயில் நிலையத்தருகில் இசக்கி அம்மனும், கீழரதவீதியில் ஓடக்கார சாமியும் இன்னும் பல தேவதைகளும் இவ்வூரில் உள்ளன. மற்றும் மடங்கள் இந்து சமய மன்றங்களும் பக்திநெறி போதித்து செயல் பட்டு வருகின்றன.

தட்பவெட் நிலை — மக்கள் வாழ்க்கை:

தென்காசி நகரின் மக்கள் தொகை ஏறத்தாழ 60,000 ஆகும். பெரும்பகுதி மக்கள் நெசவுத் தொழில், விவசாயம் செய்து வாழ்க்கை நடத்தி வருகிறார்கள்.

சித்திரை மாதக் கடைசி முதலாக ஆரியங்காவுத் (கணவாய்) தொண்டின் வழியே தென்மேற்கு பருவக் காற்று வீசுகின்றது. வைகாசி கடைசியில் சாரல் மழைத் தொடங்கி ஆனி, ஆடி, ஆவணி முற்பகுதி வரை உடலுக்கு மிக்க இனிமையைத் தருகின்றது. எப்போது பார்த்தாலும் சிறு மழையும், அதன் பயனாக திருக்குற்றால அருவியில் நீராட நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் வந்திறங்கிச் செல்லும் மக்கள் கூட்டமும், ஓயாமல் வாகனங்களின் ஓட்டமும் நாம் கண்டு மகிழத்தக்கவை இவ்வூர் மக்கள் நித்தமும் 'கூதல் மாரி நுண்துளி தூங்கும் குற்றால' காட்சியைக் கண்டு சென்று நுகரும் வசதி மிக பெற்றவர்கள்.

போக்குவரத்து வசதி:

தென்காசி ஒரு இரயில் சந்திப்பு நிலையம் மேற்கே கொல்லம், திருவனந்தபுரத்திற்கும், வடக்கே மதுரைக்கும் கிழக்கே திருநெல்வேலிக்கும் இரயில் தொடர்பு உண்டு தென்காசியில் பேருந்து நிலைய வசதியும் உண்டு தென்காசியிலிருந்து மதுரைக்கும், கொல்லத்திற்கும் கோவில்பட்டிக்கும், திருநெல்வேலிக்கும், சேலத்திற்கும், சென்னைக்கும், நேரடி பஸ் வசதிகள்உண்டு. தவிர குற்றாலம், ஆம்பூர், சுந்தரபாண்டியபுரம், சுரண்டை,

பாவூர்சத்திரம் முதலிய பக்கத்து ஊர்களுக் டவுண் பஸ் வசதியும் உள்ளது.

அ. மூர்த்தம்:- இறைவன், இத்திருக்கோயில் மூலஸ்தானத்தில் அருள் தரும் காசிவிஸ்வநாதர் லிங்கமாக காட்சி தருகின்றார். அவர் பெருமையை.

1. தெக்கணகாசி சூழ்ந்திடனுறு காலே காலாம்.
   தெக்கணகாசி நாதர்சீர் சொலும் நாவே நாவாம்
   தெக்கண காசிக்கோன் பாற் சேவையை காண் கண்ணே கண்ணும்
   தெக்கண காசிக் கதை விழுஞ்செவி செவியாம் என்றான்

2. செண்பக லிங்கம் ஆதிதெக்கண காசிலிங்கம்
   நண்பகத்துளமை நாகேச்சுரலிங்கம் நந்திபோற்றும்
   பண்பகக்சிவலிங்கம் வாலியும் பணிந்த லிங்கம்
   விண்பக வெழுந்த சோதி விரிந்த மா விசுவலிங்கம்'.
   — என்று தலபுராணம் கூறுகிறது

இறைவனின் வேறு பெயர்கள்:- விசுவன், விசுவநாதன், விசுவேசன், லோகநாதன், பசுபதி, சிவன் மயேசன், பராபரன், முக்கட்பெம்மான், சிசுவரம் தருவோன். நம்பன், சிவை மணாளன், ஏற்றோன் அசுதையார், நீலகண்டன், அநாதி, தென்காசிநாதன்.

சுவாமி காசிவிஸ்வநாதர் மிகவும் சக்தி வாய்ந்தவர். வடநாட்டு வணிகர் கனவில் தோன்றி ஆணையிட்டபடி வணிகர் தென்காசி வந்து 1972ல் சுவாமி சந்நிதி மணி மண்டபம் முதல் மூலஸ்தான வரை மொசைக்தளம் திருப்பணி செய்து கொடுத்ததாக சொல்லப்பட்டு வருகிறது. காசிவிஸ்வநாதர் மீது பக்தி கொண்ட அன்பர் "வன்னியப்ப பிள்ளை" சிவலிங்க வெண்பா இயற்றி சிவலிங்க உருவத்திலே தீட்டியுள்ளார் அப்பாடல்,



'கார்கொண்ட புண்ணியத்தால் காமதிப்பால் மங்களஞ் செய்
தார் மதியேறப் புனைந்த சாத்து கணயன்–சீர்வஞ்சி
அன்னவளைப் பாகார்த்தா ஞங்கருள்வான் மாவிடையோன்
தென்காசியத்தனையே செப்பு''

இறைவி:- இறைவனுக்கு வலப்புறத்தில் அன்னை பராசக்தி, அருள்தரும் அன்னையாக ''லோகநாயகியாக பார்ப்பவர் மனதில் பக்தி பரவசம் ஊட்டும் எழுலுறுதிருக் கோலம் கொண்டு எழுந்தருளியுள்ளார் இவ்வட்டார மக்கள் அன்னையை தங்கள் குலதெய்வமாக வாழ வைக்கும் தெய்வமாக பல பெயர்களில் விசுவை வி ஃ வநாதை விசுவேசை, விசாலாட்சி, பசுபதி துணை, மயேசை பராபரி உமை, முக்கண்ணி, சிசுவரன்பாணி, லோகாம்பை சிவை

குழல்வாய்மொழி, சுகுதை வசந்தவல்லி, அநாதை தென்காசித்தாய் என்றுப்போற்றிப் புகழ்ந்து துதத்து வருகிறார்கள்.

முருகன்: குன்று தோறாடிவரும் குமரன் இத்தலத்தில் சுவாமி கோயிலுக்கும் அம்மன் கோவிலுக்கும் அம்மைக்கும் அப்பனுக்கும்) நடுவில் அன்று அம்மான் (பொருந்தி நின்ற பெருமாள்) நின்று அருள் வழங்கிய இடத்தில் இன்று (1967ல் பிரதிஷ்டை செய்யப் பட்டது). தாய், தந்தையர்க்கு உகர்ந்த பிள்ளையாக தன்னை நாடிவரும் அன்பர் இடர் தீர்க்கும் முருகு கோலம் கொண்டு பாலசுப்பிரமணியமாக எழுந்தருளி யுள்ளார். (விபரத்திற்கு பக்கம் 40) தமிழ்நாட்டில் இவ் வாறு மூன்று தலங்களும் தனித்தனியாகவும் சேர்ந்தும் உள்ளது. இத்தலமே எனவே இத்தலத்தை சோமாஸ்கந்தர் தலம் என்றே குறிப்பிடலாம்.

பிரகார மூர்த்திகள்:- சுவாமி சந்நிதி இரண்டாங் கட்டு கோபுர வாயில் உள்பக்கமாக அக்னி திக்கில் உள்ள மண்டபம் மடப்பள்ளிக்கு வடக்கில் வடக்குமுகமாக அதி கார நந்தியும் மேற்குமுகமாக சூரியனும் உள்ளனர். கொடிமர மண்டபத்தில் கம்பீரமான தோற்றததுடன் நந்தி தேவரின் பெரிய திருவுருவம் உள்ளது. தெற்கு திருமாளபத்தி மண்டபத்தில் நாயன்மார் அறுபத்திமூவர் ஜுரதேவர் (மூன்று கால் மூன்று கைகள் உடையவர்) மிளகு அரைத்து இவரது சிரசில் சாற்றி வெந்நீரால் அபிசேகம் செய்ய காய்ச்சல் தீரும் என நம்பப்படுகிறது சப்தமாதாக்களும், மேற்கு திருமாளபத்தி மண்டபத்தில் கன்னி விநாயகர், பஞ்சலிங்கம், சாஸ்தா, மகாலக்ஷ்மி, வள்ளிதேவசேனாவுடனுறை சண்முகரும் வடக்கு திருமாளபத்தி மண்டபத்தில் கெஜலக்ஷ்மி, சனீஸ்வரர் நடராஜர், சிவகாமியம்மனும் (சிலாவிக்ரகம்) சுவாமி கர்ப்பக்கிரக கோஷ்டங்கள் தெற்கில் தெக்ஷிணாமூர்த்தி மேற்கில் மகாவிஷ்னு. வடக்கில் பிரம்மாவும், சண்டேஸர்

சந்நிதியும் உள்ளது. சுவாமி இரண்டாங்கட்டு கோபுர வாயில் வெளிப்பக்கம் இருமருங்கும் விநாயகருடன் கூடிய துவார பாலர்களின் பெரிய திருவுருவங்களும் திருஓலக்க மண்டபம் சந்நிதி வடபக்கம் முதல் தூணில் மேற்கு முகமாக துர்க்கை உள்ளது. இத் துர்க்காதேவியை வெள்ளி, செவ்வாய்க்கிழமைகளில் வழிபடும் கன்னியர் திருமணப்பாக்கியம் பெற்று வருகின்றனர்.

திருவோலக்க மண்டபம் ஈசான்யத்தில் நவநாயகர் உள்ளனர். இங்கு ஒரே கல்லில் ஒரேமுகமாக உருவாக்கப் பட்ட பழங்கால நவநாயகர்களின் உருவங்கள் மக்களின் தெரிசனத்திற்காக மேற்குமுகமாக வைக்கப்பட்டுள்ளது.

அம்மன் சந்நிதி இரண்டாங்கட்டு கோபுர வயில் வெளியில் வலப்பக்கம் சக்தியுடன் கூடிய பத்து கரங்கள் கொண்ட வல்லப விநாயகரின் திருவுருவமும் இடது பக்கம் வள்ளிதேவசேனாவுடனுறை சண்முகப் பெருமானின் உருவமும் உள்ளன. மேற்கு திருமாளபத்தி மண்டபத்தில் கன்னிவிநாயகர் சண்முகரின் உருவங்கள உள்ளன. சண்டேஸ்வர் சந்நியும் கர்ப்பக்கிரகம் வடக்கில் உள்ளது. சுவாமி சந்நிதி வெளிப்பிரகாரம் வடக்கு தரணி பீடம், சகஸ்த்ரலிங்கமும், சொக்கர்-மீனாக்ஷி சந்நிதிகளும் வயிரவர் சந்நிதியும் உள்ளன. இராஜகோபுரம் உள்பக்க மாக தென்பாகத்தில் இராஜகோபுரக்காளியின் சந்நிதியும் வெளிப்பக்கமாக வடபாகத்தில் இராஜகோபுர மகிஷாசுர மர்த்தினி சந்நிதியும் உள்ளன. இவை இரண்டும் சமீப காலத்தில் பக்தர்களிடையே பிறபல்யமாகி வருகின்றன.

ஆ தலம் தோற்றம்-

ஒவ்வொரு சமயத்தாருக்கும் ஏதாவது ஒரு ஊர் புனித க்ஷேத்திரமாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது இந்து சமயததாருக்கு சைவமரபினருக்கு "காசி" புண்ணிய க்ஷேத்திரம். வாழ்வில் ஒரு நாள் காசி சென்று விசுவ நாதரை தரிசிக்க திட சங்கல்பம் கொள்வது சைவரின்

அருள்மிகு காசிவிசுவநாதசுவாமி திருக்கோயில், தென்காசி.



மரபு. வாழ்வில் ஒவ்வொரு நாளும் காசி சென்று விசுவ நாதரை தரிசிக்க எண்ணம கொண்டான் மன்னன் பராக்கிரமன். குலக்கடவுள் குமரனும் மன்னனுக்கு "குளி"கை ஒன்று கொடுத்து வானமார்க்கமாக "காசி" சென்று வர வழி செய்தான். இராமனைத் தொடர்ந்து சீதை புறப்பட்டன் போல மன்னவனைத் தொடர்ந்து மனைவி "வில்வவதி"யும் புறப்பட்டாள். மாத விலக்கு நாட்களில் மகேசனின் தரிசனம் காணுவதற்கு செல்ல முடியவில்லை. மன்னனின் மனைவிக்கு மனைவியை விட்டு தனியே "காசி" சென்று வர மன்னனும் தயாராக இல்லை. மகேசனை-காசி விசுவநாதரை மனதில் நிறுத்தி தடைபடும் தரிசனம் எண்ணி சிந்தை வருத்த முற்றான். வேண்டியவர்க்கு வேண்டுவன அருளும் விசுவநாதர் மன்னன் கனவிலே தோன்றி செண்பக மரம் அடர்ந்த "செண்பகவனத்தில்" தான் இருப்பதாகவும் அங்கு தனக்கு கோயில் எடுப்பித்து "செண்பக வனத்தை" தெட்சண காசி என்று அழைக்கவும், அருளிச் செய்தான் இறைவன் செண்பகவனம்—தெட்சணகாசி (தென்காசி) ஆயிற்று

"ஓங்கும் நிலை பொன்ப துற்ற திருக்கோபுரமும்
பாங்கு பதினொன்று பயில் தூணுந்-தேங்கு புகழ்
மன்னர் பெருமாள வழுதி கண்ட தென்காசி
தன்னிலன்றி யுண்டோ தலத்து— ?"

—என திருக்கோயில் திருக்கோபுர தென் சுவர் கல் வெட்டில் கூறியுள்ளபடி, 'ஒன்பது நிலையுடன்' வானளாவி நின்றிருந்த கோபுர வாசல் வழியாக தென்காசி காசிவிசுவநாதர் ஆலயத்தினுள் உங்களை அழைத்துச் செல்ல விரும்புகிறேன்

ஊரின் நடுவே தென்வடல் அகலமாக 318 அடியும், கிழமேல் நீளமாக 554 அடியும் பரப்பினைக் கொண்ட இத்திருக்கோயிலின் நுழை வாசலில் சுகமான காற்று வீசிட நீங்கள் என்னை பின் தொடரலாம். நுழைவிட கோபுர இரு

சுவர் பகுதிகளிலும் உள்ள கல்வெட்டுகள் ‘காலத்தின்’ முன் நிகழ்ச்சிகளுக்கு-சரித்திர காலத்திற்கு உங்களை அழைத்துச் சென்று விடக்கூடும். எனவே உங்களிடம் இத் திருக்கோயில் உள் செல்லும் வழிப் பற்றி சிறிது கூறிட விரும்புகிறேன்.

இப்போது நீங்கள் நிற்குமிடம் இராஜகோபுரம்-திருக் கோயில் நுழைவாசல். இத்திருக்கோயிலின இராஜ கோபுரம் 172 அடி உயரத்துடன் வானளாவி நின்றிருந் தது. திருநெல்வேலியை ஆட்சி செய்து வந்த “அழகன் பெருமாள குமாரன் குலசேகர பாண்டியனின் மகன்- ‘பராக்கிரம பாண்டியன’ இத்திருக்கோபுரத்தை கட்ட ஆரம்பித்தான் பராக்கிரமபாண்டியனின் தம்பி ‘ஜடிலவர்ம குலசேகர பாண்டியன்’ கோபுரத்தைக் கட்டி முடித்தான். திருக்கோபுரத்தை பற்றிய ஏனைய செய்திகளை இறை வழிப்பாட்டுக்குப் பிறகு சாவகாசமாக நீங்கள் தெரிந்து கொள்ளலாம்

நுழைவாசலை அடுத்து பரந்த வானவெளி இடம் உள்ளது. திருவிழாக்காலங்களில் ‘ரிஷபவாகன’ காட்சியை காண மக்கள் இங்கு கூடுவார். வான வெளியின் வட புறத்தே ‘கலியாண மண்டபம்’ கட்டி முடிக்காமல் அரை குறையாக உள்ளது. கட்டி முடிப்பதற்கான வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வானவெளியை அடுத்து திருவோலக்க மண்டபம் உள்ளது. இம்மண்டபத்தின் மகா ‘பலிபீடம்’ உள்ளது. இத்திருக்கோயில் முகப்பு மண்டபத்தில் எட்டு பெரிய தூண்களில் தெற்கு வரிசை யில் மேற்கிலிருந்து கிழக்காக

அகோர வீரபத்திரர்
மன் மதன்
மகா விஷ்ணு
காளி

ஆக 4 பெரிய அரிய சிலைகளும் வடக்கு வரிசையில் மேற்கிலிருந்து கிழக்காக

அக்னி வீரபத்திரர்
ரதி தேவி
மகா தாண்டவ நடேசர்
ஊர்த்துவ தாண்டவ நடேசர்

ஆக 4 பெரிய திருவுருவ சிலைகளும் உள்ளன.

கோவிலை நோக்கி மேற்குமுகமாக வடதூணிலும், தென் தூணிலும் அழகே உருவான இரண்டு தமிழ் அணங்குகள் காணப்படுகின்றனர். இச்சிலைகள் தவிர சுவாமி சன்னதி நந்தி மண்டபத்தில் கிழக்குப் பார்க்க வட திசை, தென் திசை தூண்களில் "கவரி" வீசும் பெண்களின் அழகிய சிலை இரண்டும் உள்ளது.

பலி மண்டபத்தை அடுத்து இரண்டாம் நிலை கோபுரமும் அதனை அடுத்து நந்தி மண்டபமும் உள்ளது.'நந்தி' யின் பெரிய திருவுரு இவ்விடம் உள்ளது. நந்தி மண்டபத்தின் கீழ் புறத்தில் சூரிய பகவானும் அதிகார நந்தியும் உள்ளனர். இவர்களை வணங்கி நந்தி மண்டபத்தைக் கடந்து மணி மண்டபத்தைஅடைந்தால் பூஜா காலங்களை உணர்த்தும் பெரிய மணி தொங்கவிடப்பட்டுள்ளது. நந்தி மண்டபத்தின் ஓர் தூணில் உள்ள 'அனுமார்' சிறிதுகாலமாக பொது மக்களால் ஆராதிக்கப்படுவதைக் காணலாம் சாமகானத்தால் இறைவனை மகிழ்வித்த இராவணன் 'கைலாசம்' புகும் போது நந்தியை வழிபடாமல் அலட்சியமாக இறைவனைக் காண சென்றதாகவும், நந்தி தனது பெருமூச்சினால் இராவணனை அங்கும் இங்கும் அலைக்கழித்ததால் கோபம் கொண்ட 'இராவணன்' அடகுரங்கே என்று கூறியதாகவும்' உன்னை நான் குரங்காக வந்தே பாடம் கற்பிக்கிறேன் என நந்தி கூறி அனுமாராக அவதாரம் எடுத்து இராவண சம்ஹாரத்திற்கு காரணமாக நந்தி அமைந்தார் என புராணங்கள் கூறுகின்றன.

நமசிவாய' என்ற ஐந்தெழுத்து பரமேஸ்வரனுக்கே உரியது அதையே சதாதியானம் செய்யும் நந்தி அனுமானுக மாறி 'லங்காதகனத்திற்கு' காரணம் ஆனுன். கம்பநும் அனுமனே.

பஞ்சப் பூதங்களில் ஒன்ருகிய 'வாயு' குமாரனுகப்
பிறந்து பஞ்சப்பூதங்களில் ஒன்ருகிய 'நீரை'
கடந்து (கடலைத் தாண்டி) பஞ்ச பூதங்களில் ஒன்ருகிய
வான வெளியைக் கடந்து பஞ்ச பூதங்களில்
ஒன்ருகிய மண் (பூமியில்) ணில் வெளிப்பட்ட சீதையைத்
தேடிக் கண்டு பஞ்ச பூதங்களில் ஒன்ருகிய 'தீயை' (நெருப்பை)
லங்கையில் வைத்தான் என பொருள் படும்படி

"அஞ்சிலே ஒன்று பெற்ருன்
அஞ்சிலே ஒன்றைத் தாவி
அஞ்சிலே ஒன்று ஆருக
ஆரியர்க்கே ஆக ஏகி
அஞ்சிலே ஒன்று பெற்ற
அணங்கைக் கண்டு-
—அயலார் ஊரில்
அஞ்சிலே ஒன்றை வைத்தான்
அவன்
நன்மை அளித்துக் காப்பான்

என்று குறிப்பிட்டுள்ளார்.

நந்தி மண்டபத்தில் 'நந்தியும்' அவரது அவதாரமாகிய 'அனுமார்' மணி மண்டபத்திலும் இங்கு உள்ளனர்.

மணி மண்டபத்தை அடுத்து மகாமண்டபமும் அதனை அடுத்து 'அந்தரான மண்டபமும்' அர்த்த மண்டபமும் உள்ளது. மகாமண்டபத்தில் திருவிழா மூர்த்திகள்-பஞ்சலோக விக்ரகங்கள்-



மகாதாண்டவர் (நடராஜர்)

LORD NATARAJA

வீரபத்திரர்

VEERAPATHIRAR

மகா காளி தேவி

MAHA KALI DEVI



ஊர்த்தவ தாண்டவர் (நடராஜர்)

LORD NATARAJA

அக்னி வீரபத்திரர்

AGNI VEERAPATHIRAR

ரதிதேவி

RATHI DEVI

... S. IYER LIBRARY,
BESANT NAGAR :: MADRAS-90.



மன்மதன்

MANMATHAN

மதனகோபாலன்

MATHANA GOPALAN



தமிழணங்கு

தமிழணங்கு

நடராஜ பெருமான்- திருஉருமுதலியன உள்ளன. அர்த்த மண்டபத்தை அடுத்து மூலஸ்தான 'கர்ப்பகிரகம்' உள் ளது. இங்கு சுவாமி காசிவிசுவநாதர் அருவுருவாக எழுந்தருளி உள்ளார்.

சுவாமி கோயில் தென் புறத்தே 'பாலமுருகன்' சன் னதி உள்ளது. பாலமுருகன் சன்னதி முகப்பு மண்டபத் தில் உள்ள தூண்களில் பஞ்சபாண்டவராகிய தர்மர், பீமன், அர்ச்சுணன், நகுலன். சகாதேவன் இவர்களது சிலையும் 'கர்ணனின்' சிலையும் உள்ளது.' பாலமுருகன் கோவிலுக்கு தென்புறம் 'லோகநாயகி' எனும் உலகம்மன் வீற்றிருக்கும் அம்பாள் கோவில், கர்ப்பகிரகம். அர்த்த மண்டபம். அந்தரான மண்டபம், மணி மண்டபம், மாமண்டபம், பிரகார மண்டபம் இவைகளுடன் விளங்கு கிறது. அம்மன் சன்னதி இரண்டாம் நிலை கோபுரத்திற்கு முன்பு திருக்கல்யாண மண்டபம் உள்ளது. இங்கு ஐப்பசி மாதம் உத்திர நாளில் அம்மனுக்கு 'திருமணவிழா' சிறப் புடன் நடைபெறும். சுவாமி, பாலமுருகன், அம்மன் சன் னதி சுற்றுப்பிரகாரங்களும் சன்னதிகள் மூன்றையும் சேர்த்து சுற்றும் வாய்ப்புடன் வெளிச் சுற்றுப்பிரகாரமும் உள்ளன. வெளிச் சுற்றுப் பிரகார பின் புறத்தில் தென்னை மரங்களும் பக்கப் பகுதிகளில் நந்தவனமும் உள்ளன. சுவாமி சன்னதி நந்தி மண்டபத்தின் தென் பகுதியில் திருக்கோயில் ஸ்தல விருட்சமாகிய 'செண்பக' மரமும் வடபகுதியில் 'பலா' மரமும் உள்ளது திருக்கோயில் பெரிய திருமதிலைச் சுற்றி மாடவீதிகளும் அதனை அடுத்து ரதவீதிகள் நான்கும் அமைந்துள்ளன. ரதவீதிகளில், திரு விழா மூர்த்திகள் எழுந்திருப்பு திருவீதிவுலாவும் தேரோட்டமும் நடைபெறுகின்றன. பெரிய பிரகாரம் சுற்றி வந்து அம்மை அப்பனையும், பாலமுருகனையும் வணங்கி மீண்டும் நுழைவாசலாகிய கோபுர அடித்தள பரப்பிற்கு வருவோம். கோபுரத் தென் சுவரிலே இத் திருக்கோயிலை எடுப்பித்த மன்னவரை பற்றிய கல்வெட் டினைக் காண்போம்.

"கோதற்ற பத்தி யறுபத்து மூவர் கூட்டத்திலோ
கீதற்ற வெள்ளி ச்சிலம்பகத்தோ செம்பொன்
அம்பலத்தோ
வேதத்திலோ, சிவலோகத்திலோ, விசுவநாதனிரு
பாதத்திலோ சென்று புக்கான் பராக்கிரம
பாண்டியனே"

என குறிப்பிடப்பட்டுள்ளது.

திருக்கோயில் எடுப்பித்த புண்ணியத்தால் பராக்கிரமன் அறுபத்தி 'மூவருடன் நாயன்மார்கள் கூட்டத்திலோ அல்லது சிற்றம்பலமாகிய வெள்ளி அம்பலத்திலோ, பொன்னம்பலத்திலேயோ, வேதங்களின் சாயைகளிலோ சிவலோகத்திலோ, விஸ்வநாதரின் இரு பாதார விந்தங்களிலோ புகுந்தான் என பெருமைப் படுத்திகுறிப்பிடபடுகிருன். அடுத்துதிருக்கோபுரவடசுவர் கல்வெட்டில் ஏழு பாடல்கள் உள்ளன. அந்த ஏழுபாடல் களிலும் 'பராக்கிரமன்' தான் கட்டிய இத்திருக்கோயில் பற்றி உள்ளத்தில் உள்ளதை உள்ளபடி எடுத்துரைக் கிருன். அந்தப்பாடல்களின் பின்னனியில்தான் இத் திருக்கோயிலின் வரலாறுகள் நிறைந்து கிடைக்கின்றன. மன்னனின் மனச்சாட்சி மறைவின்றி எடுத்துறைக்கப்படு கின்றது. கல்லில் பதித்த 'பதிப்புரை' என்னவென்று கண்டுக் கொள்ள இதோ இந்த சிறியமலரின் இதழ்களே புரட்டுங்கள்.

இ. தீர்த்தம்

இத்திருக்கோயிலே சேர்ந்ததீர்த்தங்களில் முதன்மை யானது ஏழு அவை தீர்த்த சிறப்பு எனும் பகுதியில் தல புராணத்தில் விவரிக்கப் பட்டுள்ளது. திருக்கோயில் மகிமை உரைத்த படலம் 12ம் பாட்டு பின் வருமாறு:

"நன்னகரம் தென்காசி ஆலயத்துள்
நாற்கிணறு ஆனந்த பொய்கை
அன்ன ஈசான தீர்த்தம் நல் ஆற்றில்
ஆடினர் பிரமகத்திகள் முன்
பன்ன நம் பாவம் தீர்ந்து ஓங்கு மெய்ஞ்ஞானம்
படைத்தனர் சிவன் உல கனடவர்
மன்னமுப் போதும் தெரிசனை செய்வோர்
வரன் கழல் நிழல் வீற்றிருப்பார்."

உலகம்மை முன்பு இருப்பது ஆனந்த தீர்த்தம் பின்புறம் இருப்பது சகத்திரேச தீர்த்தம் கோவிலுள்ளே வடக்கே இருப்பது காசி தீர்த்தம் மடைப்பள்ளியில் இருப்பது அன்னபூரணி தீர்த்தம் இவை ஐந்தும் அகத்தீர்த்தங்கள் கோவிலுக்கு வடகிழக்கில் இருக்கும் பொய்கையே ஈசான தீர்த்தம் எனப்படும். முக்கூடல்துறை முதலிய பல தீர்த்த துறைகள் சித்ர ஆற்றில் அமைந்திருக்கின்றன.

மாத திருநாள்—வருடத் திருநாள்:

இத்திருக்கோயிலில் ஆனி மாதம் அனுஷ நட்சத்திரத்தில் "வருஷாபிஷேகம்' விழா நடைபெறுகிறது. அவ்வமயம் 108 சங்குகளில் நீர் நிரப்பப்பட்டு சங்காபிஷேகம் நடைபெற்று வருகிறது. ஆவணி மாதம் மூல நட்சத்திரத்தில் **"தெப்ப உற்சவம்"** மிக சிறப்புடன் நடைபெற்று வருகிறது. இந்த உற்சவத்தைக் காண தென்காசி வாழ் மக்களும் பக்கத்து ஊர் மக்களும் அதிகமாக கூடுகின்றனர். புரட்டாசி மாதம் "நவராத்திரி" கொண்டாடப்படுகிறது. ஐப்பசி மாதம் உத்திர நாளில் நடக்கும் சுவாமி அம்மன் "திருக்கல்யாண" உற்சவம் பத்து தினங்கள் நடத்தப்பட்டு உற்சவ மூர்த்திகள் ரத வீதியில் எழுந்தருளியுள்ளார். சிவபெருமானிடமிருந்து சக்தி லோகநாயகி பிரியாது அம்மையப்பராய் போக வடிவம் கொண்டு அருள் செய்யும் விழாவே "திருக்கல்யாண உற்சவம்" இறைவன் சிவனும், சக்தியுமாக இயங்கி உல

கத்து உயிர்களுக்கு போக வாழ்வினை அளித்தருளி அம்மையப்பராக எல்லா உயிர்களையும் காத்து அருள்கிறார் என்பதே இதன் தத்துவம் இறைவன் "தவம்" செய்யும் முறையை உயிர்களுக்கு உணர்த்தும் பொருட்டு 'தாயாகி' நின்று "தவக்கோலம்" கொள்கிறார். அதன்பின் தவம் முதிர்ந்த நிலையில் "காட்சி" கொடுத்து இறைவன் பேரின்பம் அளிக்கிறான் என்பதை உணர்த்தும் பொருட்டு "தந்தை"யாக அமர்ந்து "திருக்கோல காட்சி" கொடுக்கிறார். அதன் பின் உயிர்களோடு இரண்டறக் கலந்து சக்தியாய் சிவமாய் பெருவாழ்வு எய்வதை உணர்த்தும் பொருட்டு திருமணச் சடங்குக்கு உட்பட்டு "திருக்கல்யாணம் கொள்கிறார். மேற்படி "திருக்கல்யாண" உற்சவ நாளாகிய ஐப்பசி உத்திரத்தில் கல்யாண கோலம் காண பக்தர்கள் பெருகி வருகின்றனர். மற்றும் "சூரசம்ஹார" நாள் சிறப்புடன் ஸ்கந்த சஷ்டியில் நடைபெறுகிறது. விரதமிருக்கும் பக்தர்கள் மிக அதிக அளவில் "முருகப் பெருமானுடன்" வீதிவலம் வந்து "சூரசம்ஹாரம்" முடிந்த பின் உணவருந்துகின்றனர். முன்னொரு சமயத்தில் பிரம்மாவுக்கும் விஷ்ணுவுக்கும் இடையே ஏற்பட்ட சச்சரவைத் தீர்க்க வேண்டி சிவபெருமான் ஆதி அந்தமில்லாத ஜோதியாய் நின்றான் என்பதைத் தெரிவிக்கும் பொருட்டு இத்திருக்கோவிலில் திருக்கார்த்திகை திருவிழாவும் கார்த்திகை மாதம் நடைபெறுகிறது. கார்த்திகை மாதம் சோமவாரங்களில் சிறப்பான பூஜைகள் நடந்து வருகிறது மார்கழி மாதம் "திருவெம்பாவை" பத்து தினங்களும் காலை மாலை நடராசர் சன்னதியில் பாடப்பட்டு "திருவாதிரை" நாள் அன்று காலை "ஆருத்ரா தரிசனம்" நடத்தப்படுகிறது. தைமாதம் பூச நட்சத்திரத்தில் தீர்த்தவாரிக்காக சுவாமியும் அம்மனும் மங்கல நீராட்டுக்காக எழுந்தருளிகின்றனர். மாசி மாதம் "சிவராத்திரி" 4 கால பூஜை நடைபெறுகிறது **மாசி** மாதமே இறைவனுக்கு **பிரம்மோத்ஸவ** காலம் ஆகும். மக நட்சத்திரத்தில் நீராட்டு வைபவத்தை கணக்கிட்டு பத்து தினங்கள் உற்சவம் நடந்து வருகிறது. காலை மாலை இருவேளையும் இறை

வனும் இறைவியு[illegible]வீதி" வருகின்றனர். தினசரி இரவு விசேஷ பூஜைகள் நடத்தப்படுகிறது. தேவாரம் திருமுறை பாராயணம் வேத பாராயணங்கள் முதலியன சுவாமியுடன் வீதிவலத்தில் நடத்தப்படுகிறது. இவற்றை தவிர இரவு திருக்கோவில் திருமண மண்டபத்தில் தரமான கச்சேரிகளும், நாதஸ்வரமும், சொற்பொழிவுகளும் மற்றும் கலா நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டு மக்களை மகிழ்விக்கப்படுகின்றனர்.

பிரதோஷ காலம்:

சுவாமி காசிவிசுவநாதருக்கு எதிரே "நந்தி" பகவானின் பெரிய 'திருஉருவம்' கம்பீரமாக உள்ளது. "பிரதோஷ" காலங்களில் வழிபடும் பக்தர்கள் "நந்தியை" வழிப்பட்டு விரதமிருந்து மாலை பூஜை முடிந்தபின்உணவு அருந்துகின்றனர். திரயோதசி திதியில் மாலை 4-30 மணி முதல் 7-00 மணி வரை உள்ளகாலம் பிரதோஷ காலம் எனப்படும். தேவர்களும் அசுரர்களும்' திருப்பாற்கடலில்" உள்ள அமிர்தத்தை பெறவேண்டி "வடவரை" எனும் மந்திரமலையை மத்தாகவும் "வாசுகி" எனும் நாகத்தை கயிருகவும் வைத்து திருப்பாற்கடலை கடைந்தனர் இந் நிகழ்ச்சியை சிலப்பதிகாரமும்.

"ஆய்ச்சியர் குரவை" என்ற பகுதியில்
"வடவரையை மத்தாக்கி வாசுகியை நாணுக்கி
பண்டொரு நாள் கடல் வயறு கலக்கினையே"

எனக் கூறுகிறது தேவர்களும் அசுரர்களும் "கடலை" கடையத் துடங்கியதும் வேதனை தாளாத வாசுகி நாகம் விஷத்தைக் கக்கியது. வெளிவந்த "ஆலகால விஷம்" தேவாசுரர்களை நெருங்க அதன் வெம்மை தாங்காத அனைவரும் "சிவபெருமானை" தஞ்சம் அடைந்தனர் சிவபெருமான் சக்தியுடன் நந்தி பகவானின் இரண்டு கொம்புகளின் நடுவே பிரசன்னமாகி எங்கும் பரவியிருந்த

விஷத்தை உளுந்து அளவாக்கி அனைவரையும் காப்பதற்காக ஆலகால விஷத்தைதான் உண்டார். அது கண்டு பயந்து நின்ற பார்வதி தேவியும் இறைவனுக்கு ஏதும் ''விஷத்தால்'' இன்னல் ஏற்பட்டுவிடக் கூடாதே எனக் கருதி சிவபெருமானது கண்டத்தில் (கழுத்தில்) தன் கையை வைத்து அவ்விஷத்தை கழுத்திலேயே நிலைத்திருக்கச் செய்தாள். விஷத்தால் நீலம் பாய்ந்த கண்டம ''நீலகண்டம்'' ஆக ஆயிற்று. நஞ்சுண்டு இருந்ததால் நஞ்சுண்டவர் என சிவன் அழைக்கப்பட்டார்

''பெயத்தக்க நஞ்சுண்டு அமைவர் நயத்தக்க
நாகரீகம் வேண்டுபவர்''

—என வள்ளுவர் குறிப்பிட்டது போல நஞ்சுண்டு உலகத்தைக் காத்த அந்த நேரத்தை "பிரதோஷ" காலம்என விரதம் இருந்து நந்தி பகவானையும், சிவபொருமானையும் தரிசனம செய்தால் சர்வ பாவமும் தொலையும் எனவும், "மகப்பேறு" உண்டாகும் எனவும் நம்பப்படுகிறது. பிரதோஷ காலத்தில் சிவபெருமானை வணங்கும் முறையைப் பற்றி கடம்பவன புராணம் பின் வருமாறு கூறுகிறது.

1. நந்தியை தரிசனம் செய்து அங்கு நின்று இடப்புறமாக சென்று
2. சண்டிகேஸ்வரரை தரிசனம் செய்து சென்ற வழியே திரும்பி வந்து.
3. நந்தி பகவானை மீண்டும் தரிசனம் செய்து அங்கு நின்றும் வலமாகச் சென்று
4. கோமுகி எனப்படும் சிவபெருமானின் அபிஷேக நீர் வரும் துவார வழியை தரிசனம் செய்து சென்ற வழியே திரும்பி வந்து.
5. நந்தி பகவானை மீண்டும் தரிசனம் செய்து அங்கு நின்றும் இடமாக சென்று.
6. சண்டேஸ்வரரை தெரிசனம் செய்து அங்கு நின்றும் சென்ற வழியே திரும்பி வந்து "நந்தி பகவானை தரிசனம்" செய்து வலமாகச் சென்று.

7. திரும்பவும் "கோமுகி"யை தரிசனம் செய்து மீண்டும் வந்த வழியே திரும்பி வந்து நந்தி பகவானை தரிசியாது இடமாகச் சென்று.
8. சண்டிகேஸ்வரரை தரிசனம் செய்து சென்ற வழியே திரும்பி வந்து.
9. நந்தி பகவானை தரிசனம் செய்து பின்னரே
10. சிவபெருமானை தரிசனம் செய்தல் வேண்டும்.

இப்படி பிரதட்சணம் செய்து வழிபடுவது "சோமசூத்திர பிரதட்சினம்" என சொல்லப்படுகிறது. இப்படி சோமசூத்திரபிரதட்சினை செய்த பின் தன்னைத் தானே சுற்றிக் கொண்டு "ஆதம பிரதட்சணம்" செய்து கொள்வது அவசியம். சுவாமி சன்னதியில் திருவிழா மூர்த்திகளாக சுவாமியும் அம்மனும் உள்ளனர். ஐப்பசி "உத்திரம்" நாளில் நடக்கும் "கல்யாண உற்சவத்தில்" அம்மனின் "தபசுக் கோல" அலங்காரமும் இரவு "மஞ்சள் நீராடி" கதிர் குளித்து தெற்கு ரதவீதி கிராமத்தினரால் பல்லக்கில் சுமக்கப்பட்டு "கல்யாண பெண்ணாக"வரும் அலங்காரமும் பார்ப்பவர்களை பக்தி பரவசத்தில் ஆழ்த்தும் சுவாமி அம்மன் உற்சவ மூர்த்திகள் தவிர "நடராஜப் பெருமானின்" திரு உருவம் செம்பு விக்ரகங்கள் இரண்டு உள்ளன. திருவாதிரை நாளில் அதிகாலை விசேஷ பூஜைகளும் அபிஷேகமும் பசு பூஜையும், பின் "தாண்டவ தீபாரதனையும்" நடத்தப்படுகிறது.

திருவாதிரை

நடராஜபெருமானுக்கு அபிஷேக காலங்கள் மொத்தம் ஆறு ஆவணி, புரட்டாசி, மாசி மாதங்களில் வரும் சுக்லபட்ச "சதுர்த்தசி" திதியில் ஆக மூன்று அபிஷேகமும், சித்திரை திருவோணத்திலும், ஆனி உத்திரத்திலும், மார்கழி திருவாதிரையிலும் ஆக மூன்று அபிஷேகமும் ஆகும். மார்கழி திருவாதிரை அபிஷேகமும் ஆருத்ரா தரிசனமும், ஆனந்த தாண்டவமும் அதிகாலையில் நடைபெற்று பின் நடராஜபெருமான் திருவீதி உலா நடைபெறுகின்றது.

புராண வரலாறு

தென்காசி திருக்கோயிலின் தலபுராணம் தென்காசி யின் கீழ்ப்பகுதியில் உள்ள புலியூர் சைவ மடாதீனம் சந்திரசேகர் குருபரம்பரை 42-வது தலைமுறையில் வந்த "அழகிய திருச்சிற்றம்பல கவிராயர்" என்பார் ஆகும். அழகிய சிற்றம்பல கவிராயருக்கு குமார கவிராய தேசிகர் என்னும் பெயர் உண்டு. தென்காசியில் வாழ்ந்து வந்த சொக்கலிங்கம் பிள்ளை முதலான பெரியோர்கள் வேண்டிக் கொள்ள அழகிய சிற்றம்பல கவிராயர் தென்காசி தல புராணம் எழுதினர். கொல்லம் 1016-ம் ஆண்டில் பாடப் பெற்ற இத் "தலபுராணம்" கொல்லம் 1030-ம் ஆண்டு அரங்கேற்றப்பட்டது. இதனை சங்கரலிங்கம் பிள்ளை தனது சிறப்பு பாயிரத்தில்—

"ஆற்றல் அழகிய திருச்சிற்றம்பலராங்
குமார கவிராய வாசான்
நூற்ற தென்காசிக் கதை யாண்டாயிரத்து
முப்பாணி ஞென்மை வேண்மார்
பாற்றிலகண் சொக்கலிங்க மான் முதலோர்
வேண்டு வண்ணம் பலருங் கேட்பா
னேற்றிறைபா லுகம்மை திருமுனர் வைத்
தன் பொடரங் கேற்றினனே"

—எனக் குறிப்பிட்டுள்ளார்.

இனி புராணம் கூறும் கதைகளைப் பார்ப்போம்:—

நாரதர்: திருமால் இட்ட சாபத்தால் அல்லல் உற்ற நாரதர் தென்காசி வந்து சித்ரா நதியில் நீராடி இத் திருக்கோயில் இறைவனை வழிப்பட்டு வணங்கி சாபம் நீங்கப் பெற்று தான் இழந்த யாழ் இசையும், கண்டமும் திரும்ப பெற்றான்.

இந்திரனும்—மைநாகமும்:

சிறகுகள் கொண்ட மலைகள் பல பறந்து வந்து ஊர் களை அழிக்கவும் மண்ணவர் முறையிட இந்திரன் தென்

காசி விசுவநாதரை வழிப்பட்டு வல்லமை பெற்று மலை களின் சிறகுகளை அறுத்தான் இது கண்ட 'மைநாகமலை' தென்காசி வந்து வழிப்பட்டு சிவனது கட்டளைப்படி தென் கடலில் மூழ்கி இருக்க திரும்பவும் இந்திரன் தன் வஜ்ரா யுதத்தை ஏவ அது கூர்மை மழுங்கிற்று. இந்திரன் திரும்பவும் தென்காசி நாதனை வணங்கி நின்றான். அப் போது பெருமான் இந்திரா நீதான் வெற்றி பெற்றாய். மைநாகம் எமது ஆணைப்படி தென் கடலை விட்டு வெளி வராது, வந்தால் நீ அதை அழித்து விடலாம் என்று சொல்லி வஜ்ராயுதம் கூர்மை பெற அருள் செய்தார்.

அகத்தியர்: பங்குனி உத்திர நாளில் சிவபார்வதி திரு மணம் காண தேவர், மாந்தரும் இமயத்தை நாடிச் செல்ல வடபுலத்தில் தாழ்ந்து தென்புலம் உயர்ந்தது. சமநிலைப்படுத்த வேண்டி அகத்திய முனிவரை தென் திசை செல்லும்படி இறைவனார் பணித்தார். அகத்தி யரும் உடன் புறப்பட்டு விந்திய மலையை அடக்கி, 'காவிரி' நதியை சோழ நாட்டிலே ஓடச் செய்து தென்காசி அடைந்து உலகாளையும் பெருமானையும் வணங்கி பொதிகை மலையை அடைந்ததும் பூமி சம நிலைப்பட்டது.

மிருகண்டு: மிருகண்டு மகரிஷி தென்காசி பெருமானை வழிப்பட்டு அவனருளால் "மருத்துவதி" என்பவளை மணந்து "மார்க்கண்டனை" பெற்று பெறும் பேறு எய் தினார்.

நந்தி: சிலாதரன் எனும் முனிவர் இத் தென்காசி தலத் தை அடைந்து பிள்ளைப் பேறு அருளுமாறு தவம் இருந்து கடவுள் அருளால் 'நந்தி' என்பானை பெற்று வளர்த்து வர முனிவர் ஒருவர் "இவன் இன்னும் ஓராண்டுதான் இருப்பான்" என்று சொல்ல சிலாதரன் வருத்தமுற்றான். இதனையறிந்த நந்தி காசிவிசுவநாதரை வழிபட இறை வனும அவன் முன் தோன்றி "நந்தி உனக்கு அழிவே கிடையாது" என்று ஞானம் ஊட்டி தம் கையினாலேயே

திருமுடி சூட்டி தமது தேவ கணங்களுக்கு எல்லாம் தலைமை வகிக்கும் பதவி கொடுத்து அருளினார். அது முதல் 'நந்தி' சிவபெருமான் திரு முன்பு 'அதிகார நந்தி யாக' திகழ்ந்தான்.

சிரும்பாசுரன்: காவிரியின் தென்கரையில் சிவாலயம் கட்டி அழியா வரம் பெற்று வாழ்ந்து வந்த சிரும்பாசுரனின் கொடுமைகளை தாழமாட்டாத விண்ணவர்கள் தென்காசி வந்து அன்னை உலகாளை சரணடைய அம்மையும் தன் சூலத்தை சிரும்பாசுரன் மேல் ஏறி சம்ஹாரம் செய்தாள் போர் முனைந்த உலகம்மை 'வடக்குவாய் செல்வி' யாய் அரசருள் நங்கையாய் இப்போது அரசூர் நங்கை என பெயர் பெற்று விளங்கி வருகிறாள். (அரிகேசரி பராக்கிரமன் அவளுடைய கோயிலைக் கட்டியதால் இடைக் காலத்தில் 'அரிகேசரி நங்கை' எனவும் அழைக்கப்பட்டாள்)

வாலி: கிட்கிந்தை மன்னன் வாலி தென்காசி இறைவனை வழிபட்டு வாலியம் பொத்தை எனும் குன்றின் மீது தவம் இருந்து 'எதிர்த்தவர் பலம் பாதி தமக்கு எய்தும்' வரம் பெற்று பின் பிரம்ம தேசத்தின் வட மேற்கில் கூனை ஆற்றங்கரையில் 'வாலீச்சுரம்' கண்டு வழிப்பட்டு 'உவரி' எனும் ஊரில் தான் தோன்றி நாதனை தெரிசித்து கடல் நீராடி இலங்கேசன் இராவணனின் நட்புபெற்று கிட்கிந்தை அடைந்தான்.

கண்ணுவர்: கண்ணுவர் எனும் முனிவர் தென்காசி வந்து சித்திரா நதியின் வடகரையில் தவமிருந்து பெருமானுடைய ஆனந்த நடனக் காட்சியைக் கண்டார் நடனக்காட்சி அருளிய இடம் புலியூர். அங்கே ஆடிய பெருமான் அமர்ந்தருளியது. வேங்கை மர நிழலில் இங்கே தை அமாவாசையில் மணிக்கருணை தீர்த்தமாடி இறைவனை வழிபடுவோர் நினைத்தவை கைக் கூடும்.

சரித்திர வரலாறு

செண்பகபாண்டியர்: மாறன் மங்கலம் என்ற ஊரை ஆட்சி புரிந்து வந்த உலகநாத பாண்டியர் என்பார் சோழன் மகள் 'பொன்மாலை' என்பாளை மணந்து தன் தந்தை குலசேகர பாண்டியர் என்பாருடன் செண்பக வனம் அடைந்து உலகம்மையையும் விசுவநாதரையும் வழிபட்டு தவச்சாலை (தற்போதுள்ள குலசேகரநாதர் கோவில்) அமைத்து தவம் இருந்து இறைவன் அருளால் அன்னை லோக நாயகியை மகளாகப் பெற்று இறைவன் திருவுள்ளப்படி 'குழல்வாய்மொழி' என மகளுக்குப் பெயர் சூட்டி வளர்த்துவர விசுவநாதரே மணமகனாக வந்து ஐப் 'பசி உத்திரத்தில்' அன்னை லோகநாயகியாகியகுழல்வாய் மொழியம்மையை மணமுடித்து உலகநாத பாண்டியர்க்கு அருள் வழங்கினார், பின் குலசேகரன் எனும் ஒரு ஆண் மகன் பிறந்தான். 'குலசேகரன்' வம்சா வழியில் வந்த 'விந்தன்' எனும் வேந்தன் புகழ்பட வாழ்ந்தான். மாமன்னன் விந்தனின் பேரனே செண்பக பாண்டியர் எனும் அரிகேசரி பராக்கிரம பாண்டியன்.

பிற்கால பாண்டிய மன்னர்களின் வம்சா-வழி

(ஆதாரம்:- பேராசிரியர் கே. ஏ. நீலகண்ட சாஸ்திரிகள் நூல்)

- மாறன் மங்கலம் குலசேகர பாண்டியன்
  - உலகநாத பாண்டியன்
    - குலசேகரன் (மகன்)
      - வம்சா வழியில் விந்தன்
        - அரிகேசரி பராக்ரமன் (பேரன்) (கி. பி. 1422-62)
        - குலசேகரன் (பேரன்) என்ற ஸ்ரீ வல்லபன் (கி. பி. 1429-73)
          - பராக்கிரமன் என்ற குலசேகரன் (கி. பி. 1479-99)
            - ஜடபராக்கிரமன் என்ற வீரபாண்டியன் (கி. பி. 1473-1506)
            - ஜடபராக்கிரமன் என்ற ஸ்ரீ வல்லபன்
              - ஜட ஸ்ரீ வல்லபன் (பாண்டியர் ஆட்சியை மீட்டியவர்) (கி. பி. 1534-1542)
                - குலசேகர பராக்கிரமன் (கி. பி. 1543-1552)
                  - குணராமன்
                  - வரதுங்கராமன் (கி. பி. 1588-1609)
                - சால்வாடிபதி திருநெல்வேலி பெருமாள் என்ற குலசேகரன் (கி. பி. 1551-1564)
                  - அதிவீரராமன் என்ற ஸ்ரீ வல்லபன் (கி. பி. 1563-1605)
                    - அபிராம அதிவீரராமன்
                  - ஸ்ரீ வல்லபன்
        - அரிகேஸரி (பேரன்) (கி. பி. 1436-70)
        - சகோதரி (பேத்தி)
    - குழல்வாய்மொழி (மகள்)

(பராக்கிரமன் என்ற குலசேகரன் — சகோதரி (பேத்தி): ஜடபராக்கிரமன் என்ற வீரபாண்டியன், ஜடபராக்கிரமன் என்ற ஸ்ரீ வல்லபன்)

மன்னன் பராக்கிரம பாண்டியன் தனது குலக்கடவுள் முருகனை அருளால் கிடைக்கப் பெற்ற குளிகையின் விந்தையால் தனது மனைவி வில்வவதியுடன் விந்த நல்லூரிலிருந்து நாள் தோறும் காசி சென்று இறைவனை தெரிசித்து வரும் காலத்து அரசி மாத விலக்கு:க காசி தெரிசனம் செல்ல இயலாது வருத்த முற்றனர். அப்போது இறைவன், பாண்டியன் கனவில் தோன்றி 'உன் முன்னோன் குலசேகரனுக்கு நாம் அருளினோம். அவன் மகன் உலகநரதனுக்கு மகளாகிய' உலகம்மையாம் குழல் வாய்மொழியை மணந்தோம். இங்கிருந்து அரை காத தூரத்தில் நாம் இருக்கிறோம் நாளை இவ்விடமிருந்து ஓர் எறும்பு வரிசை ஊர்ந்து செல்லும் அதைத் தொடர்ந்து செல். நாமும் வந்து அருள் புரிவோம் என அருள—அஃன்படியே சித்ராநதி கரையிலே 'நந்தியும்' அதனருகே சிவலிங்கமும இருக்ககண்டு வணங்கி நின்றான் பராக்கிரம பாண்டியன். பின்னர் இறைவன் தி வருள ல் கோயில் கட்டி, கோபுரமும் கட்டி, தென்காசிநகரையும் நிர்மாணித்து தென்காசி கண்ட பராக்கிரமன் ஆனான். தென்காசி திருக்கோயில் எடுப்பித்த காலம் சாலிவாகன சகாப்தம் 1368-ம் ஆண்டு என தலபுராணம் கூறுகிறது.

> "ஊன்று சாலிவாகன சகம் ஆயிரத்தோடு
> மூன்று நூற்றறுபானெட்டின் முதுமதிக் குலத்துத்
> தோன்று மாண் அரிகேசரி தேவனுந்துலங்கிச்
> சான்று காண பராக்கிரமன றெடுத்ததித்தலமே"
>
> — தலவிசேடம் 18-ம் பாட்டு

14-ம் நூற்றாண்டின் இடைப்பகுதியிலிருந்து 17-ம் நூற்றாண்டின் இறுதிவரை 'தென்காசி' பாண்டிய மண்டலத்தின் தலைநகராக விளங்கி வந்துள்ளது. அதிலும் 1430லிருந்து 1534 முடிய மிகப்புகழுடன் விளங்கியதாகத் தெரிய வருகிறது.

1310-ம் ஆண்டிற்குப் பின்னரே அதாவது மாலிக்காபூரியின் மதுரை படையெடுப்புக்குப் பின்னரே தென்காசி பற்றிய செய்திகளை வரலாற்றில் தெரிய வந்தது.

நாயக்கர் மக்களின், கை மதுரையில் ஓங்க ஆரம்பித்ததும் மதுரையை விட்டு தென்காசி வந்த பாண்டிய வம்சத்தில் "அரிகேசரி சடையவர்மன் பராக்கிரம பாண்டியன். மிகவும் கீர்த்தி பெற்றவன். இவனுக்கு அரிகேசரி தேவர், செண்பக மாறன் என்ற பெயர்களும் உண்டு. இவன் 1411 லிருந்து 1463-ம் ஆண்டு வரை 'தென்காசி' யை ஆட்சி புரிந்ததாக வரலாறுகள் உணர்த்துகின்றன. இவனே "காசி கண்ட பராக்கிரம பாண்டியன்". குலக்கடவுள் குமரன் கொடுத்த குளிகையின் சிறப்பால் நாள்தோறும் 'வடகாசி' சென்று விசுவநாதரை தெரிசித்து அருள் பெற்ற மன்னன். தான் வசிக்கும் இடத்திலேயே வணங்குவதற்கு வேண்டி 'விசுவநாதரை' பிரதிஷ்டை செய்து "தென்காசி கண்ட பராக்கிரம பாண்டியனாக" ஆனான்

"உடையார் விச்வநாதன்" உத்தரகாசியில்
எழுந்தருளியிருந்த சிவாலயம் ஜீர்ண
மாகையாலே தென்னரி நாட்டு சித்ரநதி
உத்தர தீரத்திலே தக்ஷிண காசியாக ஆலயம்
செய்து தரவேணும் என்று எங்கள் கர்த்தர்
பெருமாள் அரிகேசரி தேவர் என்ற திருநாமம்
உடைய'பொன்னின்பெருமான்'பராக்கிரமபாண்டியத்
தேவர் இருந்தருளிய இடத்தின் உடனே

திருவுள்ளம் பற்றி அருளுகையாலே

என கல்வெட்டில் உள்ளபடி மன்னவன் கனவிலே மகேசன் தோன்றி சொன்னதாலே வடகாசி சென்று வழிப்பட்டு வந்தவன் தென்காசி அமைத்ததாகத் தெரிகிறது.

சாலிவாகன சகாப்தம் 1368 கி.பி. 1446ல் தென்காசி விசுவநாதர் ஆலயம் எடுப்பித்தான். இதற்குச் சான்ருக கோயில் கோபுரச் சுவர் கல்வெட்டுகளில் பதினன்கு பாடல்கள் உள்ளன. அவற்றில் ஒன்று.

“அன்பினுடன் சகாத்தம் ஆயிரத்து முன்னூற்று
அறுபத்தி எட்டின் மேல் வைய் காசித் திங்கள்
மன்தியதி ஈரைந்தில் பூருவ பக்க
மருவு ‘தெசமி’யில் வெள்ளி வாரந் தன்னில்
மின் திகழ் உத்திர நாள் மீனத்தில் வாகை வேல்
அரிகேசரி பராக்கிரம மகிபன்
தென்திசையில் காசிநகர் கோயில் காணச்
சென்று நின்று தரிழ்சனை தான் செய்வித்தானே”

திருக்குற்ருலம் தலபுராணம் எழுதியுள்ள மேலகரம் திரிகூடராஜப்ப கவிராயர் என்பார் தாம் செய்த ‘குற்ருலக் குறவஞ்சியில் குறத்தி குறி சொல்லும் படலத்தில்.

“கொல்லத் தாண்டொடு நானூ ற்றிருபத்து
நாலில் தென்காசி ஆலய மோங்க
குறி செண்பக மாற குற்சொன்னபேர் நாங்கள்”
என குறிப்பிட்டிருக்கிறது.

காசிவிசுவநாதர் ஆலயத்தை எடுப்புவித்த மன்னன் பராக்கிரமன் ஆலயத்திற்கு நித்திய பூஜைக்கு வேண்டியும் விழாக்களுக்கு வேண்டியும் மற்றும் தேவதான இறையிலியாகவும் பல ஊர்களை வழங்கியிருப்பதாக கோபுர வாசல் தூணில் இருக்கும் கல்வெட்டு மூலம் தெரிய வருகிறது.

“ஊன்று சாலி வாகன சகம் ஆயிரத்தோடு
மூணறு நூற்று அறுபான் எட்டின்
முதுமதிக்குலத் தோன்றுமான் அரிகேசரி தேவனுத் துலங்கி
சான்று கான் பராக்கிரமன் அன்று எடுத்தது —இத்தலமே”

என தலபுராணத்தில் குறிப்பிட்டிருப்பது சாலிவாகன ஆண்டுக்கு (1368க்கு) ஆங்கில ஆண்டு 77 அதிகம்.
(1368 + 77 = 1445)

1445ம் ஆண்டே, ஆலயம் எடுப்பிக்கப்பட்ட காலம். 1456ல் மன்னன் பராக்கிரம பாண்டியனால் இராஜகோபுரத் திருப்பணி துவக்கப்பட்டு ஆறு ஆண்டுக்குப்பின் திருப்பணி முடிவாகாமல் நின்றது. பின் பட்டத்திற்கு வந்த பராக்கிரம பாண்டியனின் தம்பி "சடையவர்மன் குலசேகர பாண்டியன்" இராஜகோபுரத் திருப்பணியை திரும்பவும் ஆரம்பித்து 1505ல் முடித்ததாக வரலாறுகள் சொல்லுகின்றன.

"விண்ணுடர் போற்றும் தென்காசி
பொற்கோபுர மீதில் எங்கள்
அண்ணுழ்வி செய்த பணி
இப்படி குறையாய்க் கிடக்க
ஒண்ணுது என கண்டுயர்ந்த
தட்டோடெங்கு மூன்றுவித்தான்
மண்ணுளும் மால் அழகன்
குலசேகர மன்னவனே"

என கல்வெட்டு கூறுகிறது.

குலசேகர பாண்டியனால் ஊரின் கிழக்கே "குலசேகர நாதர்" என்னும் சிவாலயமும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

செவி வழி செய்திகள்.

காசிவிசுவநாதர் ஆலயத்திற்கும் ஊரின் கிழக்கே இருக்கும் குலசேகரநாதர் ஆலயத்திற்கும் "சுரங்கப் பாதை" இருந்ததாக சொல்லப்பட்டு வருகிறது. திருக்கோவில் ஏற்படும் முன்பு "சிற்ருறு நதி" ஊரின் நடுவே சென்றதாகவும். கோவிலுக்கு மேற்கும தெற்கும் ஆறு இருக்க வேண்டி (வடகாசி கோவிலைப் போல) நதியை பராக்கிரம பாண்டியன் மாற்றி அமைத்

தார் எனவும் தலபுராணம் கூறுகிறது. தலபுராணம்மட்டு மல்ல ஸ்தலத்தில் உள்ள பெரியோர்களும் சொல்லுகின்ற னர் இதற்கு ஆதாரமாக அவர்கள் புலியூர் அணை, ஒப் பனை விநாயகர் கோவில் அருகே இருந்ததாகவும் இப் போதுள்ள புலியூர் அணை புதிதாக தோன்றிய பின் "அணைக்கரைப் பிள்ளையார் கோவில்" தோன்றியதாகவும் ஒப்பனை விநாயகர் பகுதியிலும் சம்பாத் தெரு பகுதியிலும் இப்போதும் பூமியை தோண்டும போது பல சிறு கால் வாய்கள் தோன்றுவதாக கூறுகின்றனர். கோவிலுக்குநேர் கிழக்கே குலசேகரநாதர் ஆலயத்திற்கு வடக்கே 'அரண் மனை' இருந்ததாகவும் அரண்மனையை சுற்றி கோவில் காவலர் தெரு இருந்ததாகவும் அதுவே இப்போது மருவி 'கோவைக்கர்' தெருவாக உள்ளது. எனவும் தெரிய வரு கிறது. திருநாவுக்கரசும், திருஞான சம்பந்தரும், சுந்தர மூர்த்திசுவாமிகளும், மணிவாசகப் பெருந்தகையும் தென் காசி பற்றி பாடவில்லை. (அருகில் இருக்கும் குற்றாலம் பாடல் பெற்றுள்ளது). எனவே அவர்கள் காலத்தில் 'தென்காசி' இருக்கவில்லை என தெரிகிறது. (மணிவாச கர் 3-ம் நூற்றுண்டும், நாவுக்கரசர் ஞானசம்பந்தர் இரு வரும் 7-ம் நூற்றுண்டும் சுந்தரர் 9-ம் நூற்றுண்டும் வாழ்ந்தவர்கள்) பல்லவர் காலத்தில் புகழுடன் விளங்கிய பாண்டியர் காலத்திலும், சோழப் பேரரசுக்கு 'கப்பம், செலுத்திக் கொண்டிருந்த சில பாண்டியர் காலத்திலும் தென்காசி பற்றிய செய்திகள் இல்லை. தென்காசியை சச்சிதானந்தபுரம 'முத்துத்தாண்டவநல்லூர், ஆனந்தக் கூத்தனூர், சைவமூதூர், தென்புலியூர், குயின்குடி' சித் தர்வாசம, செண்பகப்பொழில், சிவமணவூர், சத்தமாதரூர், சித்திர மூலஸ்தானம், மயிலைக்குடி, பலாவிங்கப்பாடி, வசந்தக்குடி, கோசிகை என பல பெயர்களாலும் குறிப் பிட்டு வந்ததாக கூறப்படுகிறது. ஊரில் ஓடும 'சித்ரா நதியை'யும் 'அரண்மனை ஆறு' என சொல்லப்பட்ட தாக தெரிகிறது. இதிலிருந்து ஆற்றின் ஓரத்திலோ. அல்லது அருகாமையிலோ அரசரின் அரண்மனை இருந்தி ருக்கக் கூடும் என ஊகிக்க முடிகிறது.

பாலமுருகன் சன்னிதி:

பாண்டிய வம்ச அரச பரம்பரையில் "ஆகவராமன்" என்பானது புதல்வன் 'சீவல்லபன்' 1534லிருந்து 1543 வரை தென்காசியை ஆண்டு கொண்டிருந்தபோது. திரு வாங்கூர் அரசன் 'உதயமார்த்தாண்டவர்மன்' படை யெடுப்பு நிகழ்ந்ததாகவும், 'சீவல்லப பாண்டியன், விஜய நகர அரசன் 'அச்சுத தேவராயனை' உதவி கேட்க அவ னும் பெரும் படையுடன் வந்து திருவாங்கூர் அரசனை தோற்கடித்து "தென்காசி"யை சீவல்லபனுக்கு மீட்டுக் கொடுக்கவே சீவல்லபன் தனது மகளை அச்சுததேவரா யனுக்கு மணம் செய்து கொடுத்து நன்றி செலுத்தி வீர வைணவராகிய அக்சுததேவராயன் விருப்பப்படி சுவாமிக் கும் அம்மன் லோகநாயகிக்கும் உள்ள நடுமண்டபத்தில் பெருமாள் கோவிலை பிரதிஷ்டை செய்ததாக நெல்லை மாவட்ட கோவில் வரலாறு (1962 அரசு வெளியீடு) கூறு கிறது. ஷை பெருமானே பொருந்தி நின்ற "பெருமாள்" என்ற பெயருடன் சித்ரா நதிக்கரையில் கோயில் கொண் டுள்ளார். மேற்படி சந்நிதி விடங்கர் ஆலயமாகவும், பின் நெல் களஞ்சியமாகவும் இருந்து 1967ல் பாலமுருகன் சந்நிதியாக மாறியுள்ளது.

உங்கள் பணி

திருக்கோயில் முகப்பு வட சுவர் கல் வெட்டில் பராக் கிரமபாண்டியன்-

"சேலேறிய வயல் தென்காசி ஆலயம்
தெய்வச் செயலாலே சமைந்தது இங்கு என்
செயலல்ல"

எனக் குறிப்பிட்டபடி இப்பிரமாண்டமான "கோவில்" தெய்வ செயலாலே அமையப் பெற்று செண்பக மரத்தை ஸ்தல விருட்சமாகக் கொண்டு அழகுடன் விளங்குகிறது

"எட்டுவித தரிசனத்தில் கோபுரம், சிகரம் (திருக் கதவு) துவாரம், பிரகாரம், பலிபீடம், அச்சகர், மூல லிங்கம் சண்டேசுரர் "முதலியன குறிப்பிடப்பட்டுள்ளது.

அதையே நிர்ணய கிரந்தமும்.

"கோபுர சிகரே துவாரே ப்ரகாரே
பலிபீடகே, அர்ச்சகே மூலலிங்கேச
சண்டேச அஷ்டட தர் சனம் "

என குறிப்பிடுகிறது.

12-2-1972ல் செனக்கி என்ற பாதிரியாரின் நாட் குறிப்பின்படி இராஜகோபுரமும் அதில் உள்ள நாழிகைக் கடிகாரமும் நல்ல நிலையில் இருந்ததாகதெரிய வருகிறது.

1967ல் இராஜகோபுரம் தவிர ஏனைய விமானங்களும் கோபுரங்களும் புதுப்பிக்கப்பட்டு பொது மக்கள் உதவி யால் மீள கும்பாபிஷேகம் நடைபெற்றது.

கோபுர தரிசனத்தையே முதன்மையாக பிரதானமாக சொல்லப்பட்டுள்ளது. கோபுரம் இன்றி கோவில் இருப் பது அரிது. ஆனால் இத் தென்காசி திருக்கோவிலில் கோபுரம் இன்றி இருப்பது மிகவும் வேதனைக்குரியதாக வுள்ளது. பராக்கிரம பாண்டியனால் 1456ல் கட்டப்பட்ட "இராஜகோபுரம்" பழைய நிலம் அளப்பார் குறிப்பினால் கோபுரம் 1824—25ல் மோச நிலையை அடைந்து விட்டது என உணரப்படுகிறது. கோபுரம் நல்ல நிலையில் இருந்த சமயத்தில் அது அரண்மனை அலுவலகமாகவும் பின் தாலுகா அலுவலகமாகவும் இருந்தது என்றும் தீ விபத்தி னால் பத்திரங்கள் எரிந்து கோபுரம் எரிந்தது எனறும் கூறுகிறது. கர்ண பரம்பரைச் செய்தி தற்போதைய சன் னதி மடத்தாரின் மூதாதையர் கோபுரம் தீப் பிடித்து மூன்று மாத காலம் எரிந்ததை பார்த்தாக சொன்னதாக இப்போதுள்ளவர் சொல்வது நினைவு கூறத்தக்கது.

அன்னூரது கடிதம்

எனது தகப்பனுரை பெற்ற பாட்டி அவர்கள் (முன்பு இச் சன்னதி மடத்தில் பட்டத்தில் இருத்த தெட்சணு மூர்த்தி தேசிகரின் தாயார்) திருக்கோயில் கோபுரம் தீப் பிடித்து எரிந்ததை பார்த்ததாகவும் அதை தன் மகளின் (அதாவது என் தகப்பனுரை பெற்ற பாட்டியிடம்) சொன்னதாகவும் ஷை செய்திகளை எனது பாட்டியார் எனக்கு சொல்லி நான் கேட்டதுண்டு.

(ஒப்) குற்றால சபாபதி தேசிகர்
சன்னதி மடாதிபதி
தென்காசி.

பின்னர் "தீப்பிடித்து எரிந்த கோபுரம் இரண்டாகப் பிளவுப்பட்டு "மொட்டைக் கோபுரம்" என பெயர் பெற்று விளங்கி வந்தது. பின் "மொட்டைக் கோபுரமும் திருப் பணிக் கமிட்டி (1966ல்) யினரால் இடிக்கப்பட்டு "இராஜ கோபுரம்" கட்ட வேண்டி பிளவு இடங்களில் காற்றுக் குழாய்கள் மூலம் சிமிண்ட் செலுத்தப்பட்டு திருப்பணி முடியாமல் நின்று விட்டது.

"பூமிசை வனிதை மார்பினிற் பொலிய
நாமிசை கலைமகள் நலனுற விளங்கப்
புயவரை மீது சயமகள் புணரக்
கயலினை யுலகின் கண்ணெனத் திகழ
சந்திர குலத்து வந்தவதரித்து
முந்தையோர் தவத்தின் முளையென வளர்ந்து
தென்கலை வடகலை தெளிவுறத் தெரிந்து
மன்பதை புரக்க மணி முடி புனைந்து
சங்கரசரண பங்கயஞ்சூடி
செங்கோல் ஓச்சி வெண் இடைநிழற்றி
வானவாரியும் மன்னருள் வாரியும்
தானவாரியும் தப்பாதளித்து
....
....
....

வேண்டிய பொழுதே வேறிடத்தின்றி
சேண்டரு புனலிற் செழும்புனலாட்டி
மின்கால் வேணி விசுவநாதர்க்கு
தென்காசி பெருங்கோயில் செய்து"

என கல்வெட்டு சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது வடகாசி தெரிசனம் செய்து தென்காசி கண்ட பராக்கிரம பாண்டியன் தம் வாழ்நாளை இறைபணியிலேயே செலவிட்டு தான் கட்ட ஆரம்பித்த கோபுரம் முற்றுப் பெருமல் இருந்ததை எண்ணி வருத்த முற்று

"சேலேறிய வயல் தென்காசி ஆலயம் தெய்வச்
செயலாலே சமைந்தது இங்கென் செயலல்ல -என
ஆண்டவன் மீது பாரத்தைப் போட்டு

"அதனையின்ன மேலே விரிவு செய்தேப் புரப்பாரடி
வீழ்ந்தவர் தம் பாலேவல் செய்து பணிவன்
பராக்கிரம பாண்டியனே"

என் உறுதிகூறி தான் கண்ட **கனவு** நினைவாகுமா என நினைத்து தென்னுட்டு செல்வமாக தென்காசி கோபுரத்தை திருப்பணி செய்யக் குறிப்பிட்டு அவன் இறைவனடி சேர்ந்த பின் தம்பி குலசேகரனுல் கட்டி முடிக்கப் பட்டது. காலத்தின் கோலத்தால் தீப்பிடித்து பிளவுபட்டு மொட்டைக் கோபுரமாக நின்று அதுவும் இடிக்கப்பட்டு இன்று "கோபுரம் இன்றி" இருக்கும் நிலை ஏற்பட்டுவிடும் என முன்னமேயே உணர்ந்தானே ,பராக்கிரமன் என எண்ணும் வண்ணம் **தனது கனவுகளை**- திருக்கோவில் திருப்பணிகளை கோபுர வடசுவரில் கல்வெட்டாக அமைந்துள்ளான் பராக்கிரம பாண்டியன் அக்கல் வெட்டில் குறிப்பிடத்தக்க பாடல்கள் மொத்தம் ஏழு அந்த ஏழு பாடல்களிலும் மிக முக்கியமாக கருதப்படும் பாடல் ஒன்று அப்பாடலிலே இத்தென்காசி ஆலயத்திற்கு குற்றம் குறைவு வந்தால் அதனை சீர் செய்து ஒழுங்கு படுத்துபவர்களை உலகோர் அறிய நான் 'பணிந்தேன்' என பராக்கிரம பாண்டியன் குறிப்பிட்டுள்ளான் அப்பாடல்:

"ஆராயினுமிந்த த்தென் காசி மேவும்
பொனலயத்து
வாராததோர் குற்றம் வந்தாலப் போதங்கு வந்ததனை
நேராகவே யொழித்துப் புரப்பார்களை நீதியுடன்
பாரா ரறிய ப்பணிந்தேன் பராக்கிரம பாண்டியனே

ஆமாம் பாண்டியன் முன்னமேயே 'பணிந்தேன்' என சொல்லி விட்டான். ஆனல் அப்பணிதலை ஏற்றுக் கொண்டு குற்றம் வந்த கோபுரத்தை நிலை நிறுத்தும்-இராஜ கோபுரம் எடுப்பிக்கும் பாக்கியவான் யார் ?

பாண்டியனது கனவை நனவாக்கும் பாக்கியவான் யார்? சிலரா? பலரா? அல்லது எவரேனும் ஒருவரா? காத்திருப்போம். காலம் பதில் சொல்லும்.

வியத்தகு விக்கிரகங்கள்

சுவாமி சன்னதி திருஓலக்க மண்டபத்தில் உள்ள அற்புத சிலைகளில் ஒன்றகிய மஹாவிஷ்ணுவின் சிலையில் அவரது திருக்கரத்தில் 'கருப்பு'வில் இருப்பதுஅபூர்வமானது கரும்பு வில் - காமனுக்கு (மன்மதனுக்கு) உரியது, கண்ணனும் கரும்பு வில் வைத்திருப்பதில் என்ன கிருஷ்ண லீலையோ? அடுத்து 'நவக்கிரகம்' இருக்கும் இடத்தில் சூரியன் முதல் கேது முடியவுள்ள எல்லா கிரகங்களும் வரிசையாக ஒரே திசையை நோக்கி ஒரே கல்லில் இருப்பதையும் காணலாம்.

பலா மரத்தடியில் இருக்கும் சிவபெருமான் (கிராதரர்) விக்கிரகம் கலை பொக்கிஷங்களில் ஒன்றகும் மான் மழுவினை மேல் இரு கைகள் வைத்திருக்க கீழ் இரு கைகளில் அம்பும் வில்லும் வைத்திருக்கும் அபூர்வ சிலை இது ஆகும். ஒரு காதில் மகர குண்டலமும், மற்றொரு காதில் தோடும் அணிந்து 'தோடுடைய செவியனக' காட்சி தரும் சிலை இது. 'பார்த்தனுக்கு அன்று பாசுபதம்' தந்த நிலை அது இராம காதையில் வரும் 'சிவதனுசு' வின் மூலநிலை அது "படையானை பாசுபத வேடத்தானை" பற்றி அப்பர் சுவாமிகள் தனது தேவாரத்தில்,



கிராதரர் (சிவன்)
அர்ச்சுனருக்கு பாசுபதம் அளித்த திருக்கோலம்
LORD SIVA

'காப்பதோர் வில்லும் அம்புங் கையதோர் இறைச்சி
பாரம் என்றும்
''நெடியமால் பிரம்மனோடு நீரெனும் பிலயங்கொள்ள
அடியொடு முடியுங்காணார் அர்ச்சுனற்கு அம்பும்
வில்லும்
துடியுடை வேடராகி தூயமந்திரங்கள் சொல்லிக்
கொடி நெடுந்தேர் கொடுத்தார் குறுக்கை
வீரட்டனாரே"

என்றும் குறிப்பிட்டு சிவனுக்கு வில்லும் அம்பும் உண்டு என்பதை உறுதி படுத்துகிறார்.

இத்திருக்கோவிலைக் கட்டிய மன்னன் பராக்கிராம பாண்டியனின் திருஉருவச்சிலை திருவிழா மூர்த்தியாகிய 'காசிவிசுவநாதர்' லோகநாயகியை வணங்கும் நிலையில் வழிபடும் வரிசையில் சுவாமி சன்னதியில் வைக்கப்பட்டுள்ளது.

திருக்கோவிலில் நடக்கும் திருவிழாக்களுக்கு கர்த்தாவாக-திருவிழாத் தலைவராக பராக்கிரமன் மதிக்கப்பட்டு ஐப்பசித் திருநாள் கால்கோள்நாளிலும் மாசித் திருநாள் கால்கோள் நாளிலும் மற்றும் தேரோட்டம் வடம் பிடிக்கும் முதல்வராகவும், திருத்தேர் நிலை வந்து சேர்ந்த பிறகு முதல் தட்டுமாலை பிரசாதம், பரிவட்ட மரியாதை பெறும் முதல் நபராகவும் மதித்து போற்றப்படுகிறார்.

கல் வெட்டுக்கள்

இக்கோவிலில் அநேக கல் வெட்டுக்கள் உள்ளன. பெரும்பாலானவை 16, 17ம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த பாண்டிய மன்னரையும், சில இக்கோவில் கட்டிய அரிகேசரி பராக்ரம பாண்டிய மன்னரையும், அவர் வம்சத்தாரையும் குறிப்பிடுகின்றன.

இக் கல் வெட்டுக்களை எடுத்தெழுதி சென்னை அரசாங்கம் கல்வெட்டு இலாகா அதிகாரிகள் 1948ம் வருஷம் செப்டம்பர் மாதம் 6ம் தேதி ஜி.ஒ. 1172ல் வெளியிட்டிருக்கின்றனர். இராபர்ட் சூவெல் எழுதி அரசாங்க ஆணைப்படி சென்னை பல்கலைக்கழகத்தார் வெளியிட்டுள்ள தென் இந்திய சரித்திர சாசனங்கள் என்ற நூலில் சில குறிப்புக்கள் காணப்படுகிறது. இக்கோயிலில் உள்ள கல்வெட்டுக்கள் தவிர கிழக்கே உள்ள குலசேகர முடையாற் கோவில் சுவர்களிலும், சிதம்பரேஸ்வரர் கோயில் சுவர்களிலும் கல் வெட்டுக்கள் காணப்படுகின்றன. இவைகளும் முன் கூறிய ஜி.ஒ.வில் வெளிவந்துள்ளன.

கல் வெட்டுக்கள் சில பாக்களாகவே அடைந்திருக்கின்றன. இன்னும் சில குறிப்புக்களாக தெரிகிறது. கல் வெட்டுக்களிலிருந்து இக் கோவில் வரலாறு ஒருவாறு திரட்டலாம். இக்கோவில் சாலிவாகன சகாப்தம் 1368= கி. பி. 1425ல் பராக்கிரம பாண்டிய மன்னராகிய ஸ்ரீகேசரி தேவன் கட்டினரென்றும் கோபுரம் கட்டி முடிவதற்குமுன் அவர் காலமாயினரென்றும், பின்னர் அவர் தம்பி சடிலவர்மதேவர் கட்டி முடித்தார் என்றும் முன்னலேயே சொல்லப்பட்டிருக்கிறது.

முக்கியமான சில கல் வெட்டுக்களை கீழே குறிப்பிடுகிரேம்.

நீர் 502 சகா 1419 ஜடிலவர்மன்: தனக்கு நல்ல பெருமாள் சைவசிகாமணி பட்டன் கோவில் முறைகளை ஒழுங்காய் நடத்தாதாலும் அவர் பந்துக்கள் ஷை முறையின் உரிமைகளை கைவிட்டதாலும் இந்த முறை சிவபாத சேகரன் திக்கெல்லாம் புகழும் பெருமாளுக்கு மாற்றப்பட்டது.

நீர் 503 சகா 1412 இக்கோயிலிலும் சுற்றுக் கோயில்களும் கட்டப்பட்டதை குறிப்பிட்டு முறைகாரரின் மக்கள் சகல உரிமைகளுடன் வேலை பார்க்க அனுமதி கொடுக்கிறது.

நிர் 506 கொல்லம் 685, அரிகேசரி என்ற பராக்கிரம பாண்டிய தேவன் தெக்ஷிண காசியில் சிற்ருற்று வடகரையில் விஸ்வநாதர்க்கும் கௌரிக்கும் கோயில் கட்டியதாக கூறுகிறது.

நிர் 508 சகா 1416 குலசேகரதேவன் கோயிலில் ஸேவை செய்வதற்காக சில ருத்திர கணிகையர்களுக்கு டின்ருக குடியில் நிலமும் (தென்காசியில்) தோட்டம் மனைக்கட்டுக்களும் அளிக்கப்பட்டுள்ளன.

நிர் 512 சகா 1475 ஜடிலவர்மன் விஸ்வநாதர்க்கும் பிரதிஷ்டை செய்யப்பட்ட நாயன்மார்களுக்கும் வழிபாடுகள் செய்ய தேவதாய நிலங்கள் கொடுக்கப்பட்டன.

நிர் 518 சகா 1385 பாரக்கிரமபாண்டிய தேவன் பூஜை முறைக்கு 6 பட்டர்கள் நியமித்தல். அவர்களுக்கு நிலம் வீடுகள் நன்கொடை இதில் இக்கோவில் தான் கட்டியதாக குறிப்பிடப்படுகிறது.

நிர் 520 சகா 1406 பராக்கிரமபாண்டிய தேவன் இசை பாடவும், நடனமாடவும், பெண் வேலையாட்களுக்கு நீலகண்டன் பெருந்தெருவில் வீடும் தோட்டமும் இனும்

நிர். 523 சகா 1467 ஜடிலவர்மன். ஆகமங்கள், புராணங்கள், சைவசித்தாந்த நூல்கள் வாசிக்க ஓர் மடத்தின் நிர்வாகத்திற்காக சத்தியஞானதரிசனி என்பவருக்கு நிலம் நன்கொடை.

நிர் 527 சகா 1424 குலசேகர தேவன் கோவில் கட்டியதையும், பற்பல வேலைகளுக்கு ஆட்கள் நியமித்ததையும் குறிப்பிட்டு குன்ருக்குடியில் நிலம் கொடுத்தது பரிவட்டம் பூமாலை முதலியன கொடுப்பதற்காக நாட்டீஸ்வரமுடையானுக்கு வீடு நன்கொடை செய்ததையும் கூறுகிறது.

நிர் 530 சகா 1480 ஜடிலவர்மன் இரண்டாவது பிரகாரம் (வடக்கு) வெற்றியுடையார் சொக்கநாதசாமி கோவில் கட்டியதும், அதன் நித்திய பூஜைக்காக குலசேகர பேரியில் நிலம் அளித்ததும்.

நிர் 545. சகா 1471 ஜடிலவர்மன் கன்னிமார் அம்மன் கோயிலைக் குறிக்கிறது.

நிர் 576. சகா 1447 கொல்லம் 701 பராக்கிரம பாண்டியர் கட்டிய கோவில் பழுதுபட்டதால் வீரமார்த்தாண்டன் என்ற சிறைவாய் மூத்தவனால் பழுதுகள் பார்க்கப் பட்டு 700-ம் ஆண்டு மகரமாதம் 4-ம் தேதி பிரம கலசாபிஷேகம் நடத்தப்பட்டது.

நிர் 579. சகா 1482. குலசேகரலிங்கராயன் தர்ம கர்த்தா வேலை பார்க்க நிலம் இறும்.

நிர் 580. சகா 1527. தாடி சடைச்சியால் புதிதாய் கட்டப்பட்ட கோயிலில் உலக முழுதுடைய நாச்சியாரின் அபிஷேகக் கட்டளைக்காக நிலம் இறும்.

நிர் 601. சகா 1494. பாண்டியமுதலி அம்மன் கோயில் முன் மண்டபம் கட்டியதும் மாசித் திருநாள் 6-ம் நாளில் திருஞானசம்பந்த சுவாமிகளுக்கு ஞானப்பால் அளிக்கவும் ஆவணி விழா, வஸந்த விழா செலவுக்கு நிலங்கள் கொடுத்ததும் கூறுகிறது.

குலசேகரமுடையார் கோவில் கல்வெட்டுக்கள்

நிர் 480 சகா 1489. ஜடிலவர்மன் ஸ்ரீவல்லவதேவன் தெக்ஷிணகாசி கீழ்பக்கம் சிற்ருற்றின் வடகரையில் குலசேகரநாதர் குழல்வாய்மொழி மங்கை நாச்சியார் கோயில்களும் சுற்றுக் கோயில்களும் கட்டி நித்திய நைமித்திகம் நடைபெற நிலங்கள் மானியம்.

விண்ணவரம் பெருமாள் கோவிலில்:

நிர் 498 சகா 1483 ஸ்ரீவல்லபதேவன் அரசன் ஸ்ரீவல விண்ணவர் எம்பெருமான் என்ற அழகர் கோவில் கட்டி நிலங்கள் அளித்தது.

நிர் 500 சகா 1493 இக்கோயிலில் விழாக்களுக்கும் ஸ்ரீபலிக்கும் நிலம் அளித்ததும் கோயில் முன் ராமநுஜக் கூடம் கட்டி நிலம் அளித்ததும் கூறுகிறது.

சிதம்பரேஸ்வரர் கோவிலில்:

நிர் 397 சகா 1469. திரிபுவன சக்கரவர்த்தி கோனேர்மை கொண்டான் குலசேகர தேவன் புலியூர் பஞ்சாயத்தாரால் நிலம் அளிக்கப்பட்டது.

நிர் 398—399-சகா 1530, 1526 வழிபாடுகளுக்காகவும் கோயில் பழுது பார்க்கவும் செங்கோட்டையில் நிலம் அளித்தது

[ராபர்ட் சூவெல் எழுதி அரசாங்கத்தார் ஆணைப்படி சென்னை பல்கலைகழகத்தார் வெளியிட்டுள்ள தென் இந்திய சரித்திர சாசனங்கள் என்ற நூல் பின் வரும் குறிப்புக்கள் உள்ளன]

பக்கம் 213 அரிகேசரி பராக்ரமபாண்டியன் கி. பி. 1422ல் அரசாளத்துடங்கினார். அவர் 1463-64 வரை ஆண்டிருந்தார். அவர் கல் வெட்டுக்கள் பல இருக்கின்றன (Travancore Arch sur I பக்கம் 44, 95, 126, 514, of 1909. 172, 178, 188, 199 of 1895 E. R. 1905 P 56, 1906 P 72, 1910 P 100, 19:8 P 158).

பக்கம் 217 கி.பி. 1430ல் திருநெல்வேலியில் அழகன் பெருமாள் குமார குலசேகரபாண்டியர் பட்டத்துக்கு வந்தார். அவர் மகன் பராக்கிரமன் தென்காசி கோபுரத்தை கட்டினான். (T.A.S., 53, 278 of 1908, 198 of 1895).

பக்கம் 272 கி.பி. 1615ல் திருநெல்வேலியில் வரகுண சீவல்லப குலசேகரன் ஆண்டு வந்தார். அவர் தென்காசியில் ஒரு வேள்வி செய்தார். அதிலிருந்து அவர் சோமாசியார் தீட்சிதர் என்ற பட்டத்துடன் வழங்கப்படுகிறார். (V. R. III. TINN. 393 A; T.A.S., 147: 268 of 1908)

பக்கம் 381. கி.பி. 1614.17ல் பெருமாள் சீவலமாறன் வரகுண ராமன் (குலசேகர சோமாசியார் தீட்சிதர் எனவும் மறுபெயர்). இவர் தென்காசியில் ஒரு வேள்வி செய்தார். சாலிவாடியின் மகன் சீவல்லபனுக இவர் இருக்கலாம் (V. R. III Tirunelvely 395 A Travancore 127; T.A.S; 147; 268 of 1908.

முக்கிய கல் வெட்டுகள்

பெரிய கோபுரத்துதென் சுவரில் உள்ளன.

1. அன்பினுடன் சகாத்தமா யிரத்து முந்நூற்
றறுபத்தெட் டதன் மேல் வைகாசித் திங்கள்
மன்றியதி யீரைந்தில் பூறுவ பக்க
மருவுதெச மியில் வெள்ளி வாரந் தன்னில்
மின்திகழுத் தரநாள் மீனத்தில் வாகையே
லரிகே சரிபராக் கிரம மகிபன்
தென் திசையிற் காசிநகர்க் கோயில் காணச்
சென்று நின்று தரிழ்சனை தான செய்வித்தானே.

2. அடைவுதிகழ் சகாத்த மாயிரத்து முந்நூற்
றறுபத்தொன் பதின் மேற்செல் மிதுனஞாயற்
றிமை மருவு தியதிபதினெ ....

....

—————————— விற்சனிவார மதனில் இராச......

....

உடையவரைத் தென்காசிச் சிவாலயத்தி
னுள்ள மைத்துத் தெள்ளமுத முட்டினனே.

கோபுரம் வட சுவர்

3 ஆரா யினுமிந்தத் தென்காசி மேவும் பொது ஞலையத்ன்
வாரா த தோர்குற்றம் வந்தாலப் போ தங்கு வந்ததனை
நேராக வேயொழித் துப்புரப் பார்களை நீதியுடன
பாரா ரறியப் பணிந்தேன் பராக்கிரம பாண்டியனே.

4. அரிகே சரிமன் பராக்கிரம மாற ரைனருளால்
வரிசேர் பொழிலணி தென்காசிக் கோயில் வகுத்துவலம்
புரிசேர் கடற்புவி போற்றவைத் தேனன்பு பூண்டிதனைத்
திரிசேர் விளக்கெனக் கார்பார்பொற் பாத மென் சென்னியதே

சாத்திரம் பார்த்திங் கியான் கண்ட பூஜைகள் தாம் நடத்தி
யேத்தியன் பால்விசுவ நாதன் பொற் கோயில்லன் றுப் புரக்கப்
பார்த்திபன் கொற்றைப் பராக்கிரம மாறன் பரிவுடனங்
கோத்திரந் தன்னினுள் ளார்க்கும் அடைக்கலம் கூறினனே.

சேலே றியவயல் தென்காசி யாலயந் தெய்வச் செய
லாலே சமைந்ததில் கென் செயலல்ல லதனையின்ன
மேலே விரிவு செய் தேபுரப் பாரடி வீழ்ந்தவர் தம்
பாலேவல் செய்து பணிவன் பராக்கிரம பாண்டியனே.

மனத்தால் வருக்கவு மெட்டாத கோயில் வருக்க முன்னின்
றெனைத்தான் பணிகொண்ட நாதன் தென்காசியை யென்றுமண்மேல்
நினைத்தா தரஞ் செய்தங் காவல் புனையும் நிருபர்பதந்
தனைத் தாந்நின்றஞ்சித் தலையீதி யானுந் தரித்தனனே.

பூந்தன் பொழில் புடை சூழுந்தென் காசியைப் பூதலத்தில்
தாந்தங் கிளையுடனேபுரப் பார்கள் செந்தாமரையாள்
காந்தன் பராக்கிரமக் கைதவன் மானிகவ சன்கொற்கை
வேந்தன் பணிபவ ராகியெந்நாளும் விளங்குவவரே.

காண்டகு சீர்புனை தென்காசிக் கோபுரக் கற்பணியா
னுண்டில் முடித்துக் கயிலை சென் றுனகி லேசாபதம்
பூண்டுறை சிந்தை யரிகேசரிவிந்தைப் போர் கடந்த
பாண்டியன் பொன்னின் பெருமாள் பராக்கிரம பாண்டியனே.

கோபுரம் தென் சுவர்

பன்னுகலியுக நாலாயிரத் தைஞ்ஞூற் றைம்பத் தெட்டின்மே
லெவரும் பணிந்து போற்றச்
சென்னல்வயல் தென்காசி நகரில்நற் கார்த்திகைத் திங்கள்
தியதி யைந்திற் செம்பொன்வார
மன்னியமார் கழி நாளில் மதுரை வேந்த வடிவேழு
தொளுத பராக்கிரம மகீபன்
சொன்ன வரை போல் திருக்கோபுரமுங் காணத்
துடியிடையா யுபான முதல் துடக்கினனே.

ஏராருஞ் சகாத்தமாயிரத்து முந்நூற்றெழுபத் தொன்பதின் மேற்
கார்த்திகை மாதத்திற்
சீராருந் தியதி யைந்திற் குருவாரத்திற் சிங்கமுகுர்த்
தத்தல் மிறுகசீரிழ் சத்தின்
னிலரன நுளால் வழுதி பராக்கிரம மகிபன்
கூட நபானமுதல் கோட்டினனே.

மென்காசை மாமல ரன்னமெய் யோர்க்கும் விரிஞ்சனுக்கும்
வன் காசு தீர்த்திடும் விச்சுவ நாதன் மகிழ்ந்திருக்கப்
பொன்காசை மேற்சென்று .... கைக்குமிப் பூதலத்துத்
தென்காசி...

கோதற்ற பத்தி யறுபத்து மூவர்தங் கூட்டத்திலோ
தீதற்ற வெள்ளிச் சிலிம் பகத்தோசெம்போ னம்பலத்தோ
வேகத் திருலோசிவ லோகத்தி லோவிசுவ நாதனிரு
பாதத் திலோ சென்று புக்கான் பராக்கிரம பாண்டியனே.

ஓங்கு நிலையொன்ப துற்ற திருக் கோபுரமும்
பாங்குபதி னென்று பயில்தூ ணும் - தேங்கு புகழ்
மன்னர் பெருமான் வழுதி கண்ட தென்காசி
தன்னிலன்றி யுண்டோ தலத்து.

கோபுரம் வடசுவர்க் கால்

அணி கொண்டவிந்த வணங்குமொன் றேயடியேற் குணக்கு
மணி கொண்ட வாசல் மணியும் ஒன் றேபகை மன்னரையும்
பிணி கொண்ட காரையு முன்னீரையும் பெரும் பூதத்தையும்
பணி கொண்ட செண்பகத் தென்னு பராக்கிரம பாண்டியனே.

கோபுரம் தென்சுவர்க் கால்

ஏறிய சகாத்தமாயிரத்து நானூற் றெழுபத்தின் னுலில்
வரிழ்சம்பரி த பி தனில் மாதம்
தேறிய சித்திரை யிருபத் தொன்பதாகுந்தேதியிரண்
டாம் பக்கந் திங்களுரோ கணிநாள்
வீறுயர்ந்த மிதுனத்து நெய்வேலி மாறன் வீரவேள்
குலசேகரச் செழிய னென்று சுர
ராறுபுனை யகிலேசர் காசியிலே விளங்க வணிமவுலி
தரித்தனன் பரராசர் பணிந்தனரே.

ஏடியல் மாலை யணிந்தாலும் வாடு மெனப்புலவோர்
பாடிய வீரவெண் பாமாலை யைப்பொன்னின் பாண்டியன் போர்
தேடிய வேற்செழி யன்குல சேகரத் தென்னனைப் போற்
சூடிய வேந்தருண் டோவொரு வேந்தரைச் சொல்லுகிலே.

சகன்கால மாயிரத்து நானூ ற்றெண்பத்தாறிற் சலதி சூழ்ந்த
செகங்காண விரத்தாக்கி சித்திரையி லிருப்பதாந் தேதி வேந்தர்
புகழ்ந் தேவல் செயப்பூறுவதிதியாறில் முதல் வாரம் புனர் பூசத்திற்
சுகந்தாதி புனையழகன் சீவலவே ளென மகுடஞ் சூடினனே.

கோபுரம் வட சுவர் மற்றோர் கால்:

சீர்கொண்ட செங்கமலை வாழத் திரையாடைப்
பார் கொண்ட வான்வீர பாண்டியனென் — றேர்கொண்ட
கானுலா மாலை கனகமகு டம்பு னைந்தான்
மானவே லரனபிரா மன்.

சேனுலவு வெண்டிங்கட் செல்வனைத் தண்ணென்று
நீணிலமோ ரேழு நிழற்றுமே — பேணி வந்து
பூவேந்த ரேத்தும் புகழ்வீர பாண்டியனங்
கோவேந்தன் கொற்றக் குடை.

பற்றலர்மண் கொள்ளும் பணிந்தார்க் கரசளிக்குங்
கொற்ற முயர்க்கும் மறங் கூருமே — விற்று வசம்
வில்லவனை வென்று கொண்ட வீரமா றன் செழியன்
வல்ல மெறிந் தானேந்து வாள்.

கோபுரம் வட சுவர்

நண்புற் றெதிர்ந் தகலி நாலாயிரத்தறு நூற்
றெண்பத்தொன் பானி லிருங்கடன் சூழ் — மண்பெற்று
மின்னுமகு டம்புனைந்தான் வெல்வீர மாறனெனு
மன்னவர்கோ மானபிரா மன.

கற்றுணர்ந்தோன் காசிக் கலியன் கவிராயன்
மற்றடந்தோள் வேல்வீர மாறனுக்குச் சொற்புனைந்தா
ஞன் மங் கலமு நவிற்றுகுடை மங்கலமும்
வாண் மங் கலமும் வகுத்து.

அத்தர்தென் காசிகண் டோன் கண்ட வாலயமு
மடியாரும் வாழ்வு பெற வந்
தழகனதி வீரரா மன்சறுவ மானிப
மதாகக் கொடுத்த படிதான்
சித்திரைப் பரணியூர்த் தெண்ட தோடப் பொன்
திருபபக் கொடுத்தவ ஹரிற்
செங்கோட்டை யார் கொண்ட பகுதியு நிறுத்தித்
திருக்கோயி லிற் பகுதியாய்
வைத்ததை யறக்கழித் தாயங் கணக்குடன்
மாநவமி திரு நாளிடை
வந்த காணிக்கை பாட்டப்பகுதி காணம்பல்
வரியிவை யெல்லாங் கழித்துப்
பத்திற மாய்க்குண ராமநாதற்கு மேற்படி
பணங்கழித் தடியர் வீட்டுப்
பணமுங் கழித்திப் படிச்சறுவ மானியப்
பட்டயமு மருளினனே.

மாமண்டபம் தென் சுவர் கல் வெட்டு

சுவஸ்தி ஸ்ரீ கோ சடிலவர்மரான திரிபுவன சக்கரவர்த்திகள் ஸ்ரீ குலசேகர தேவற்கு யாண்டு இரண்டாவதின் எதிர் நாற்பத்து இரண்டாவது விருச்சிக நாயற்று இருபத்து ஆரும் தியதி பௌர்ணையும் பிரகஸ்பதி வாரமும் பெற்ற கார்த்திகை நாள் தென் ஆரி நாட்டு சித்ரா நதி உத்தர தீர்த்து தக்ஷிண காசியில் முன்னாள் அண்ணாழ்வி பராக்கிறம வாணத்ய தேவர் திருவுள்ளம் பற்றி உடையார் விஸ்வநாதனையும் பிரதிஷ்டிப்பித்து இக்கோயில் உபாநதி ஸ்தூபி பரியந்தம் கர்ப்பகிரகம் அர்த்த மண்டபம் இடைநாழிகை மகாமண்டபம் சோபாநம் இவையுங் குறைவறத் திருப்பணியுஞ் செய்வித்து ஆவரண கோபுராதிகள் செய்வித்து பூஜைக்கு நித்திய நைமித்திகங்களுக்கு வேண்டும் தேவதானமும் விட்டு உத்சவ பரியந்தமாயுள்ள கர்மங்களையும் நடத்தி........அதனைத்துக் கொத்து...........

(பராக்கிரமனுக்கு தம்பி சடிலவர்மனை குலசேகர தேவன் இக் குலசேகரனே கோபுரத்தை முடித்தான்)

(கட்டளைக்கலித்துறை)

விண்ணுடர் போற்றுந் தென்காசி பொற் கோபுர மீது லெங்க
ளண்ணுழ்வி செய்த பணியிப் படிக்குறையாக்கிடக்க
வொண்ணு தெனக்கண்டு யர்ந்த தட்டோ டெங்கு மூன்று வித்தான்
மண்ணுளு மாலழ கன் குலசேகர் மன்னவனே.

(அரிகேசரி தேவர் சாசனம் கி. பி. 1450)

பூமிசை வனிதை மார்பினிற் பொலிய
நாமிசை கலைமகள் நலனுற விளங்கப்
புயவரை மீது சய மகள் புணரக்
கயலினை யுலகின் கண்ணெணத் திகழச்

சந்திர குலத்து வந்தவதரித்து
முந்தையோர் தவத்தின் முளையென வளர்ந்து
தென் கலை வடகலை தெளிவுறத் தெரிந்து
மன்பதை புரக்க மணிமுடி புனைந்து

சங்கர சரண பங்கயஞ்சூடிச்
செங்கோ லோச்சி வெண்குடை நிழற்றி
வான வாரியு மன்னருள் வாரியுந்
தான வாரியு ந்தப்பா தளித்து

மறக்களை பறித்து நல் லறப்பயிர் விளைத்துச்
சிங்கையி லனுரையி லிராசையிற் செண்பையில்
விந்தையி லறந்தையில் முதலையில் வீரையில்
வைப்பாற் ெ.............ன்னறை வென் கண்
டெப் பாற் றிசையு மிசை விளக்கேற்றிப்
பதினெண்........... கம் போற்றப்
பதி னெண் பாதை த்பார்திப ரனைவருந்

திறையுஞ் சின்னமு முறை முறை குணர்ந்து
குறைபல விரந்து குரை கழ லிறைஞ்ச
வவரவர் வேண்டிய தவரவர் கருளி
அந்தண ரனேகர் செந்தழ லோம்ப

விந்தை முதல் அகரம் ஐந்திடத்தியற்றிச்
சிவனெறி யோங்கச் சிவார்ச்சனை புரிந்து
மருதூரார்க்கு மண்டப மமைத்து முன்
ஒருதூர் மூங்கி லுள் புக்கிருந்த

சிற்பரர் தம்மைத் திருவத்த சாமத்துப்
பொற் காலத் தமுது பொலி வித் தருளிச்
சண்பக வனத்துச் சங்கரர் தமக்கு
மண்டப மமைத்து மணிமுடி சூட்டி

விழாவணி நடாத்தி விரைப் புனலாடல்
வழா வகை நடாத்த நின் மன னடுளதாலுல்
வற்ரு ஃருவியும வற்றி வற்கட
முற்ற விக்காலத் துறுபுனல் நல்கென

வேண்டிய பொழுதே வேறிடத்தின்றிச்
சேண்டடு புனலிற் செழும் புனலாட்டி
மின்கால் வேணி விசுவ நாதர்க்குத்
தென்காசி ப்பெருங் கோயில் செய்து

நல்லா கமவழி நைமித்திகமுடன்
எல்லாப் பூசையும் எக்கோயிலினும்
பொருள் முதலனைத்தும் புரையற நடாத்தித்
திருமலி செம் பொற் சிங்காசன மிசை

உலக முழுதும் உடையாருடனே
இலகு கருணை யிரண்டுரு வென்ன
அம்மையும் அப்பனும் மாயனைத்துயிர்க்கும்
இம்மைப் பயனு மறுமைம் குறுகியு
மேப்பட நல்கி வீற்றிருந்தருளிய

ஸ்ரீ அரி............ தேவரான பராக்கிரம பாண்ட தேவற்கு யாண்டு இருபத்தெட்டாவதின் எதிராவது ....ற்று இருபத்தெ ன்ருந் தியதியும் பூர்ணையும் வெள்ளிக் கிழமையும் பெற்ற சோதி நாள் தேனவாரி நாட்டு சித்ர நதி உத்தர தீரத்தில் தக்ஷிண காசியிலே உடையார் விஸ்வநாதனுக்கு அபிநவமாக உபாநாதி ஸ்தூபி பய்யந்தமுந் திருப்பணி செய்து உடையார் விஸ்வ நாதனையும் பிரதிஷ்டித்த அர்த்த மண்டபம், இடை நாழிகை, மகாமண்டபம் ஸோபாநம் இவையுந் திருப்பணி செய்து திருப்பள்ளி அறை நாச்சியார் முதலாக உள்ள திருவுடம்புகளும் ஏறி அருளப் பண்ணுவித்து ஆவரண கோபுராதிகளும் ஆரம்பித்து, மேல் உடையார் விஸ்வ நாதர் பூஜைக்கு அமுதுபடி சாத்துப்படி திருமலை த்திருப் பரிவட்டந் திருவிளக்கு உட்பட பல நித்ய நியமங்களுக் கும் பல விசேஷ பூஜை திருநாட் செலவுக்கும், முன்னுள் இரண்டாவதின் எதிர் இருபத்து மூன்ருவது முதலுக்கு நாம் தேவதானமாக விட்ட பற்றுக்களில் தென்வாரி நாட்டு த்தென்காசிக்கு பெரு நான்கெல்லைகையாவது:-

கீழ் எல்லை புலியூர் பற்ருன காராண் குளத்தில் நீர் நக்கலுக்கும் பரிம்புக்கும் புலியூர் அகரப்பற்றில் புஞ்சைக் கும் நாராயண ஸ்ரீ பாதங்கள் மடப்புறத்தில் மேல் எல்லைக்கும் மேற்கும், தென் எல்லை சித்ர நதிக்கு வடக்கு மேல் எல்லை குன்றக்குடிக்குப் பரிம்புக்குக் கிழக்கும் வ.........சென்னுய்ப் பொற்றைக்கும் குத்துக் கல்லுக்கும் தெற்கும் ஆக 'இன்னுன் ,கெல்...... ட்ட பற்றும் இந்த நதிக்கு தக்ஷிண தீரத்தில் வாயுளான் குடிப் பற்றுக்கு ப்பெருநான் கெல்லைகையாவது:-

கீழ எல்லை புலியூர் அணைக்கும் திருச்சாலைக் குடிப் பற்றுக்கும் ஆழங்காலுக்கு மேற்கும், தென் எல்லை திருச்சாலைக்குடிப் பற்றுக்கும் பராக்ரம பாண்டிய சதுர்டுவதி மங்கலத்து பட்டகழ் அகரப்பற்றில் வட

வெல்கைக்கும் உடையார் திருக்குற்றாலமுடைய நாயனார் பழந்தேவதானத்துக்கு வடக்கும், மேல் எல்கை வாயுளான்குடி அணைக்குக் கிழக்கும் வட எல்கை சித்ர நதிக்குதெற்கும் ஆகஇன்னான்கெல்கைக்குட்பட்டபற்றும்.

குன்றக்குடிப் பற்றுக்குப் பெரு நான் கெல்கையாவது கீழ் எல்கை இடைமலைப் பரிம்புக்கு மேற்கும் தென் எல்கை சித்ர நதிக்கு வடக்கும், மேல் எல்கை செங்கோட்டை பிடாரியார் கே யிலுக்கும் இலத்தூறக்கு போகிற பெருவழிக்கு கிழக்கு, வடஎல்லை கடமர் குளத்துக்கு தெற்கு ஆக இன்னான் கெல்கைக்குட்பட்ட பற்றில் உடையார் திருக்குற்றாலமுடைய நாயனார் தேவதானமான நிலம் ஒன்பதுமா முந்திரிகையின் மூன்றுமா முக்காணியும் நீங்கலாக உள்ள பற்றும்.

பராக்கிரம பாண்டிய நல்லூறற் பற்றுக்குப் பெரு நான் கெல்கையாவது:- கீழ் எல்கை இலுப்பை த்தொண்டிந் பெரு வழிக்கு மேற்கும் தென் எல்கை இக்குளத்தின் நீர் நக்களுக்கு வடக்கும், மேல் எல்கை உடையார் திருக் குற்றலமுடை . . . . .ர் பழந் தேவதானமான திருச் சாலைக்குடிப் பற்றுக்கு க்கிழக்கும் வட எல்கை சித்ர . . . . தெற்கும் ஆக இன்னான் கெல்கைக்குட்பட்ட பற்றில் இ ங்கிண்டி ஸ்ரீ பத்மநாபன் தான இறையிலி நில மிரண்டுமாவும் நீங்கலாக உள்ள பற்று.

நல் லூறற் பற்றில் வள்ளை முட்டமும் இக் குளத்தில் நீர்ப் பாயு நிலமாய் வடவூற் பற்றில் நின்றுங் கூட்டின நிலம் மூன்றுமா அரையும் ஆக இப்பற்றுக்குப் பெரு நான் கெல்கையாவது:- கீழ் எல்கை காடேற்றிப் பற்றுக்கு மேற்தம், தென் எல்கை வடவூர் பற்றில் செங்குளத்தில் நீர்பாயு நிலத்துக்கும் தஞ்சாவூர் ப்பெருங்காலுக்கும் அனுபோக மழகியான் குளத்தில் நீர்பயும் பற்றுக்கு வடக்கும், மேல் எல்லை இக்குளத்தில் நீர் நக் லுக்கும் தவணைப் பற்றுக்கும் கிழக்கு, வட எல்கை தஞ்சாவூரில் நின்றும் தவணைப் போகிற பெருவழிக்கு தெற்கும் ஆக இன்னான் கெல்கைக்குட்பட்ட பற்றும்;

வடவாரி நாட்டுப் பைம்பொழிற் பற்றில் நல்லான் பிள்ளைப் பெற்ருளுக்கும் விஸ்வநாதப்பேரிக்கம் பெரு நான் கெல்லையாவது:- கீழ் எல்லை செங்கோட்டை பிடாரியார் கோயிலுக்கும் இவ்வூரில் நின்றும் நல்லூற்குப் போகிற பெருவழிக்கு மேற்கு தென் எல்லை ஆற்றுக்கு வடக்கு மேல் எல்லை பைம்பொழிலில் நின்றும் நல்லூற்குப் போகிற பெருவழிக்கும் முழங்கால் முட்டிப் பாறைக்கும் கிழக்கு வடஎல்லை தேனிடு பொற்றைக்குத் தெற்கு ஆ.........ன் கெல்லைக்குட்பட்ட பற்றும்.

முப்பதாவது மேஷ ஞாயிற்று இருபத்தே......தியதியும் பூர்வ பக்ஷத்து பஞ்சமியும் திங்கட்கிழமையும் பெற்ற புனர்பூசத்து நாள் நாம் முன்பு விட்ட பற்றுக்கள் நீங்கலாக நாளது பூஜை செலவுக்கு விட்ட தென்வாரி நாட்டு இராசகுலராம நல்லூரான புலியூற் பற்றுக்கும் வீரபாண்டிய நல்லூர் பற்றுக்குப் பெருநான்கெல்லையாவது:- புலியூர் பற்றுக்குப் பெரு நான்கெல்லைக் கீழ் எல்லை திருவெண் காட்டு முதலியார் மடப்புறமான பாட்டாக்குறிச்சிப் பற்றுக்கு மேற்கு, தென் எல்லைச் சிற்ருற்றுக்கு வடக்கு மேல் எல்லை பழந்தேவதானமான தென்காசிப் பற்றுக்குக் கிழக்கு, வடஎல்லை ஆய்க்குடிப் பற்றுக்குத் தெற்கு ஆக இன்னான் கெல்லைக்குட்பட்ட பற்றில் உடையார் திருக்குற்ருலமுடைய நாயனுர் தேவதானமும், உடையார் விக்ரம பாண்டீஸ்வரமுடைய நாயனுர் தேவதானமும் நயினுர் திருவிருந்த பெருமாள் திருவிடையாட்டமும், ஸ்ரீக்குஷ்ணந்திருவிடை யாட்டமும் பராக்ரமபாண்டிய நல்லூரில் நயினுர் திருவேங்கடநாதன் திருவிடையாட்டமும், முகந்தாதைது நாராயண ஸ்ரீபாதங்கள் மடப்புறமும் அகரப்பற்றும் நீங்கலாக இன்னான் கெல்லைகுட்பட்ட பற்றும்;

வீரபாண்டிய நல்லூருக்கு பெரு நான்கெல்கையாவது:- கீழ்எல்கை தட்டான்குளத்துப் பரிம்புக்கு மேற்கு தென் எல்கை திருச்சிற்றம்பலத்துக் காலான இராசகுலரா......காலுக்கும் நயினர் திருவிருந்த பெருமாள் திருவிடையாட்டமான ஆகவராம......துக்கும் வடக்கு மேல் எல்கை திருவெண்காட்டு முதலியார் மடப்புறமான பாட்டாகுறிச்சிப் பற்றுக்குக் கிழக்கு வடஎல்கை வீந்தனூர் ப்பெருவழிக்கு தெற்கு, ஆக இன்னான்கெல்கைக்குட்பட்ட பற்றும் ஆக இப்பற்றுக்களில் பெரு நான்கெல்கைக்குட்பட்ட பற்றும் ஆக இப்பற்றுகளில் பெரு நான்கெல்கைக்குட்பட்ட நஞ்செய், புஞ்செய் மாவடை மரவடை, பட்டை, கொடித் தோட்டம், செக்கிறை மற்றுமுள்ள ஸமஸத்த ப்ராப்திகளும் முப்பதாவது பசான முதலுக்குத் தேவதானமாக விட்ட அளவுக்கு இம் மரியாதியிலே இவ்வோலை பிடிபாடாகக் கொண்டு ஆசந்த்ரதாரவத் இவ்வாலையம் உள்ள அளவும் கையாண்டு கல்லிலுஞ் செம்பிலும் வெட்டிப் பூசையுந்தாழ்வற நடத்திப் போதவும் பாற்க இவை கிடாரத்தூருடையான் எழுத்து உ துல்யம்.

திருக்கோயில் முன்புநிற்கும் நான்குமுக கல் தூணில் உள்ள கல் வெட்டு

(தூணில் கிழக்கு முகம்)

1. சிவமிஸ்து, சந்தியாரிய மேதத் சததம் சமஸ்த
2. சுரமௌலிபிஹி சாஸனம் விஸ்வநாதய்யபம்போ(ஸ)
3. ர் ஜயதி சாஸ்வதம் சகாப்தம் ஆயிரத்து முன்
4. னூற்று எண்பத்து நாலின் மேற் செல்லா நின்ற
5. ஸ்வஸ்தி ஸ்ரீ கோஜடிலவர்மரான திரிபுவனசக்கரவ
6. ர்த்திகள் பெருமாள் அரிகேஸரி தேவர் என்று திரு
7. நாமம் உடைய பொன்னின் பெருமாள்
8. பராக்ரம பாண்டிய தேவர் இருந்தருளிய இடத்-
9. துக்கு யாண்டு முப்பத்து ஒன்ருவதின் பாதர் ஒன்-
10. பதாவது மிதுன நாயற்று இருபத்தெட்டாந்திய-

11. தியும் அபர பக்ஷத்து திரயோதசியும் சுக்ரவாரமும்
12. பெற்ற நம்முடைய இருந்தருளிய இடத்தின் திருநாள்
13. ஆன மிருகசீர்ஷத்து நாள் ஜனமும் பதினெட்டு நாட்டு வெ
14. ள்ளாளரும் இரண்டு பத்திரி வழியும் மற்றும் அஞ்சு வகை
15. ப்பட்ட பரிகரமுங் கூடி(க்) கற்பித்த காரியமாவது; உடையார்
16. விஸ்வநாதர் உத்தரகாசியில் எழுந்தருளி இருந்
17. த சிவாலயம் ஜீர்ணமாகையாலே தென்னரி
18. நாட்டு சித்திரநதி உத்திர தீரத்திலே நமக்கு தக்ஷி
19. ண காஸியாக ஆலயஞ் செய்து தரவேணும்
20 என்று எங்களுடைய கர்த்தர் பெருமாள் அரிகேசரி
21. தேவர் என்று திருநாமமுடைய பொன்னின் பெரு
22. மாள் பராக்கிரம பாண்டித் தேவர் இருந்தருளிய இட
23. த்தின் உடனே (ஸ்வ)ப்னத்திலே திருவுள்ளம் பற்றி அ
24. ருளுகையாலே முன்னுள் ஸகாப்தம் ஆயிரத்து முன்
25. னூற்று அறுபத்தெட்டின் மேல் ரிஷப ஞாயற்று
26. ப் பத்தாந்தியதியும் பூர்வ பக்ஷத்து தசமியும் சுக்ர
27. வாரமும பெற்ற உத்திரத்து நாள்மீனமுகூர்த்தமா
28. க கர்ஷணையும் செய்து தக்ஷிண காசியாகத்தி-
29. ருப்படை வீடும் உணடு ஆக்கி உடையா(ர்)
30. விஸ்வநாதனையும் நாச்சியார் உலக முழுது
31. முடைய நாச்சியாரையும் பிரதிஷ்டித்து இன்னைய
32. னூர்க்குத் திருக்கோயில் உபாருதி ஸ்தூபியந்
33. தமாகவும் அர்த்த மணடபம் இடை நாழிகை
34. மஹாமண்டபம் ஸோ (பா) நம் ஆவரணக்கோ
35. புராதிகளும் திருப்பணி செய்து நாச்சியார்
36 உலகமுழுதுடைய நாச்சியார்க்குந்தி
37. ருக்கோயிலும் ஆவரண முங்காயிலும் குறைவற திரு

38. ப்பணிஞ் செய்த கோபுர முமாரம் பித்து
39. ஸஹஸ்ரலிங்காலய மும்ஸக்தி பீடாலயமும்
40. செய்து ரிஷப தேவர் முதலாக உள்ள பரி
41. வார நாயன் மாரையும் பிரதிஷ்டித்து ஸஹஸ்ர
42. லிங்கமும் ஸக்தி பீடமும் பிரதிஷ்டித்து அரிகேஸரி
43. நங்கை என்று திருநாமமுடைய பிடாரியை
44. யும் பிரதிஷ்டித்து கோயிலும் மேலை அஞ்
45. சாந்திருவீதியில் அரிகேஸரிப்பிள்ளையார் திரு-

(தூணின் வடக்கு முகம்)

46. க்கோயிலும் ஆராட்டு மண்டபமும்
47. வெச்சமுது மண்டபமும் மற்று மிக்
48. கோயில்களிலுள்ள திருப்பணிகளும்
49. மஹாகே புரமும் எங்கள் கர்த்தர் இரு
50. ந்தருளிய இடம முன்னுள் இரண்டா
51. வதின் எதிர் இரண்டாவது வை
52. காசி மாதந்துடங்கி முப்பத்து ஒன்று-
53. வதின் எதிர் ஒன்பதாவது வரை பதினே-
54 ழு வருஷத்துக்குள்ளு த்திருப்பணி செய்து நி-
55. றை வேற்றின இது மானுஷமல்ல தெய்-
56. வீக மென்று எல்லாரு ம(றி)ந்து கொள்
57. ளவு ம எங்களுடைய கர்த்தர் இருந்தருளி
58. ய இடம் திருவுள்ளம் பற்றி..ருள நாங்க-
59 ளும் கர்ஷனை துடங்கி இ நத த்திருப்ப
60. ணி யெல்லாங் கூடச் செய்கையுஞ்
61. செய்து எங்கள் இருந்தருளிய இடம் இ-
62. ன்னுயனார்க்கும் நாச்சிமார்க்கும் மற்று
63 ள்ள (ந)ாயன் மார்க்கும் பூஜாங்கத்து
64. க்கு வேண்டும் அனைத்து க்கொத்தி
65. லுள்ளரையுங் கற்பித்து திருவாபர-
66 ணமும் பரிகல பரியின்னமுங் குடுத்து
67. பூஜையு குறைவற நடத்தி மாசி மா
68. தத்தில் மஹத்து நாள் தீர்த்தமாக நடந்து

69. போதுகிற திருநாளு நடத்தி பூஜை
70. க்கு வேண்டும் அமுதுபடி கறியமுது
71. சாத்துப்படி கற்பூரம் குங்குமம் பன்
72. நீர் திருமலை திருப்பரிவட்டம் திருவி-
73. ளக்கு உட்பட்ட பலவகைக்கும் மற்று-
74. ம் வேண்டும் நித்ய நைமித்திகங்களுக்-
75. கும் தேவதானமாக விட்ட தென்னாரி
76. நாட்டு த்தென்காசியும் இலஞ்சி குன்ற
77. க்குடி புலியூர் பாட்டக்குறிச்சி வீரபா
78. ண்டிய நல்லூர் உள்ளிட்ட பற்றும் நல்
79. லூர் பற்றில் தஞ்சாவூர் காடேற்றி வள்
80. (ளை) முட்டம் பன்றி முட்டம் தண்ண
81. பை கற்று ச்செற்றை உள்ளிட்ட மற்றும்
82. குறு மறை நாட்டு ததுவரங்காடும் இடை-
83. தவளையும் காகசடி நாட்டு மான நிலை ந-
84. ல்லூரில் அகவயலில் நடுவில் த்தலைகூ-
85. ற்றில் விட்ட பற்றும் இப்பற்றில் தென்கரை
86. காரிகுறிச்சி பிள்ளையார் குளம் உள்ளிட்டப்-
87. ற்றும் ஆக இப்பற்றுகளும் விட்டு இவை நீ
88. ங்கலாக இதுக்கு முன்பு குளமுங் காலும்
89. அணையும் அன்றிவன் காடாய்க்கிடந்-
90. த காடுகளிலே பல இடத்திலும் ஏர்வை-

இலக்கியம்

இத்தலத்தைப் பற்றிய தலபுராணம் கீழப்புலியூர் சைவ மடாதீனம் அழகிய சிற்றம்பல தேசிகரால் இயற்றப் பட்டுள்ளது. சிறந்த வாக்கும் உயர்ந்த கருத்துக்களும் உள்ளன. வண்ணச் சரபம் முருகதாச சுவாமிகள் என்ற தண்டபாணி சுவாமிகள் அருளிய தென்காசிச் சிவன் பதிகமும், முருகபிரான் பதிகமும் உண்டு.

[வண்ணச்சரபம் முருகதாச சுவாமிகள் என்று வழங்கும் தண்டபாணி சுவாமிகள் இயற்றிய தென்காசி சிவன் பதிகம்].

காப்பு வெண்பா

சீரார் வளங்குலவும் தென்காசி ஊர் சிவனே
காரானை தோலுடுத்த கையானே - யாராலும்
காண்டற் கரிய கடவுளே நாயடியேன்
வேண்டிற் புதஞ் செய் விரைந்து.

1) உத்தமருக குறபாகி ஒரு சிறிதும் அறஞ்செய்யாத்
தத்தயற் காட்டு மொரு தவத்தோலைப் பாரே ஒரு
பித்தனென ப்பகர்ந்தார்க்கும் பிறவாத நெறிஈந்தாய்
சித்த காயம் தொழும் நாதா தென்காசியூர் சிவனே.

2) தீயினுக்கந் நாள் உணவு செய்க் கொடுத்ததாம் சிகரிக்
கோயில் முகம்பினிற் ஞேன்றும் குறை வொழியக்-
காணேனொரு
தாயினுக் கினியானே தவத்தோர் தம் உயர் போதம்
சேயமையாள் பங்கமர்ந்தாய் தென்காசியூர்ச் சிவனே

3) பேறானந்தம் பெற வேண்டி ப்பெரிதிரக்கும்
சிறியேனைக்
கூறரிய வினைப் பேயாற்குலை குலைய விடலாமோ
ஆறணியும சடையானே அருட் கடலின் ஆரமுதே
சீறரவப் பணி பூண்டாய் தென்காசியூர் ச்சிவனே.

4) மைக்கடலின் நீருடுத்த மா நிலத்திற் பல் உயிரும்
இக்கலியிற் படுத்துயர் போய் இன்புறச் செய்திடல்
வேண்டும்
முக்கணுடை ப்பெருமானே முழு நீற்றின்
பொதிந்துளவாம்
செக்கர் பொடும் வடிவத்தாய் தென்காசியூர்ச்சிவனே.

5) தெரியாமை யாற்றமியேன் தேடியதீவினை முற்றும்
எரியூடு பஞ்சேயொத்(து) எரிதரச் செய்திடவேணுஞே
கரியோனும் நான் முகனும் காண்பரிய காரணனே
திரி சூல படையானே தென்காசியூர் ச்சிவனே.

6) முற்ருத பசுங் கமலமுகை போலு முலையார்தம்
பற்ருசை மறவாத படிதேதும் உய்வேஞே
வற்ருத நீர் பெருக வடகாசி வரு கங்கை
சிற்ருற்றின் உருவாய் தென்காசியூர்ச் சிவனே.

7) மாஞர் மெய்த்தவ மின்றி மறமாதி க்குணங் கொண்டு
வீஞட்கள் கழிப்பேனை வினைக்கடலில் விட்டு விடேல்
காஞத பொருளாகக் காண்பன முற்ருவானே
சேஞடர் மிகப் போற்றும் தென்காசியூர்ச் சிவனே.

8) தந்தியுரி திட்டதிலும் தழல் ஏந்தி நடித்ததிலும்
அந்திமதி முடித்ததிலும் அடிமை விருப்புயர்வாஞே
இந்திரன் சேய் அடித்ததுக் கெதிற் பகழி யீந்தோனே
செந்திரு மின்ஞள கலாத் தென்காசியூர்ச் சிவனே.

9) கன்னி ஒருத்தியைச் சேர்ந்து கான்முளையோர் இரண்டின்று
முன்னிமையோர் தமையாண்ட முதிரஞன் கண்டடைந்த காண
வன்னிருத்ர புரமூன்றும் வாய்த்த புலாற் பொடி செய்தாய
சென்னி வடம் புனை தோலா தென்காசியூர்ச் சிவனே.

10) பாலஞ வரயன் முதற் பாவலவர் ஒரு நால்வர்
போஞப்புகழ் தோய் ந்துன் புதுமலர்த்தான் பெறுவேஞே.
மாலாஞ முதன் மனத்து மதமா வொன்றுரித்தோனே
சேலஞப்புகழ் கவுரித் தென்காசி யூர்ச்சிவனே.

திங்கள் முடித்தினிதாடும் திருமேனிக்கவின் போலும்
செங்கமல மலர் வாவித் தென்காசியூர்ச்சிவனே
மங்களம் சேர் திருநெல்லை மாநகரில் வாழ் ஒருவன்
தூங்கமுறப் போற்றுமிவை துதிப்பார்க்குச் புகமுண்டே

உப கோயில்கள்

1. வெயிலுகந்த விநாயகர் கோயில்
2. வரகுணநாதர் கோயில் (தற்போது தெப்பக் குளத்திற்கு எதிரே சிதலமடைந்த நிலையில் உள்ளது)
3 குலசேகர நாதர் கோயில் (தற்போது அரசு மருத்துவமனை அருகில் உள்ளது)
4. விண்ணவரம் பெருமாள் கோயில்
5. நவநீத கிருஷ்ணன் கோயில்
6. அரசூர் நங்கையம்மன் கோயில்
7. சிதம்பரேசுவரர் கோயில் (தென்காசி மேலப்புலியூரில் உள்ளது)
8) யானைப்பாலம் விநாயகர் கோயில் காவேரி அம்மன் கோயில் (யானைப்பாலத்தருகில் உள்ளன)
9) கீழமாரி ஐயனார் கோயில் (கோவில் நஞ்சை நிலத்தில் இருக்கிறது.
10) சங்கர நாராயண சுவாமி கோவில் (யானைப்பாலம் நதிக் கரையில்)

இணைப்புக் கோயில்கள்

1) திருவாலீசுவரர் கோவில் (கீழப்பாவூரில் உள்ளது)

நிர்வாகம்

அறநிலைய ஆட்சித்துறை சட்டப்படி நிர்வாகம் நடந்து வருகிறது நிர்வாக அதிகாரி கோவிலின் நிர்வாகங்களை கவனித்து வருகிறார் நிர்வாக அதிகாரிக்கு ஆலோசகர்களாக அறநிலையத்துறையினரால் நியமிக்கப் பட்ட ஐந்து பேர் கொண்ட அறங்காவலர்கள் குழு ஒன்று உள்ளது.

இத்திருக்கோவிலுக்கு 1456ல் பராக்கிரம பாண்டியன் முதலாவது கும்பாபிஷேகம் நடத்தினன் என்றும் 1524ல் திருவாங்கூர் ராஜா 'பூதல வீர மார்த்தாண்ட வர்மனல் மற்றுமொரு கும்பாபிஷேம் நடத்தப்பட்டுள்ளது என்றும் 6—9—1918 சென்னை அரசாங்க கல்வெட்டு அறிக்கை சொல்கிறது. 1848ல் ஒரு கும்பாபிஷேகம் நடத்தப்பட்டதாக மேலகரம் செண்பக குற்ருலக் கவிராயத்து தென்காசி புராணம கூறுகிறது. 21-4—1948-ல் சித்திரை 9-ம் நாள் ஒரு கும்பாபிசேகம் நடைபெற்றது.

பூஜா காலங்கள்

காரண ஆகம விதிப்படி இத்திருக்கோயில் பூஜா காலங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

காலை மணி	5-30	திருவனந்தல் பூஜை
காலை மணி	8-30	விழா பூஜை
மதியம்மணி	12-00	உச்சிக்கால பூஜை
மாலை மணி	6 00	சாயரட்சை பூஜை
இரவு மணி	7-30	ஸ்ரீபலி பூஜை
இரவு மணி	9-00	அர்த்த ஜாமம் பூஜை.

சொத்துக்கள்

இத்திருக்கோவிலுக்கு சுமார் 51.250 ஹெக்டேர் நஞ்சை நிலமும், சுமார் 11.750 ஹெக்டேர் புஞ்சை நிலமும் உள்ளன.

தவிர கோவிலுக்குச் சொந்தமான 15 கட்டிடங்களும் வாடகைக்கு விடப்பட்டு வருமானம் வருகிறது.

ஆண்டு வருமானம் ரூ. 2,00,000

வரவு விபரம்
செலவு விபரம்

அருள்மிகு காசிவிசுவநாதசுவாமி ஆலயம்
தென்காசி.

1390ம் பசலி வரவு விபரம்

வரிசை எண்	தலைப்பு	தொகை ரூ	பை
1.	நஞ்சை வருமானம்	92,573	97
2.	புஞ்சை வருமானம்	17,722	50
3.	கட்டிட வாடகை	52,196	90
4.	மனை வாடகை	19,856	50
5.	உபயம் வரவு	8,746	35
6.	உண்டியல் வருமானம்	20,445	35
7.	அர்ச்சனைக் கட்டணம் வகையரா	10,034	46
8.	தஸ்திக் பணம்	1,385	04
9.	திருவிளக்குப் பூஜை	581	00
10.	மீன் பாசிக் குத்தகை	344	00
11.	வட்டி வரவு	1,602	24
12.	பல வகை	2,651	05
	ஆக கூடுதல்	2,28,139	36

அருள்மிகு காசிவிசுவநாதசுவாமி ஆலயம்
தென்காசி
1390-ம் பசலி செலவு விபரம்

வரிசை எண்	தலைப்பு	தொகை ரூ.	பை
1.	பணியாளர்கள் சம்பளம்	69 698	03
2.	சர்க்கார் தீர்வை	4,298	65
3.	நகர்மன்ற வரி	10,099	83
4.	சகாயத் தொகை	10,001	40
5.	தொலை பேசிக் கட்டணம்	1,918	30
6.	மின்சாரம்	10,041	85
7.	தபால் செலவு	185	00
8.	காகிதம் மற்றும் எழுது பொருள்	1,154	05
9.	அச்சிடுதல்	2,471	85
10.	விவகாரச் செலவு	42	50
11.	பிரமுகர் தரிசனம்	334	80
12.	பலவகை	3,266	16
13.	திருவிளக்குப் பூஜை	893	63
14	நித்தியப்படித்தரம்	22,617	57
15.	திருவிழா	45,640	13
16.	பாலமுருகன் சன்னதி	443	84
17.	மேல சங்கரன் கோயில்	7,321	88
18.	சிதம்பரேசுவரர் ஆலயம்	4,372	57
19.	மராமத்து	7,242	95
20.	களம் கங்காணம்	520	00
21.	பாத்திரம் பழுது பார்த்தல்	497	00
22.	வாகனம் பழுது பார்த்தல்	750	00
23.	மதம் சம்பந்தமான கல்வி	981	55
24	வார வழிபாடு	247	40
25.	உபயச் செலவு	4,891	83
26.	புத்தகம் மற்றும் பருவ வெளியீடுகள்	2,590	00
27.	மகிஷாசுரமர்த்தினி அம்மன் சன்னதி	759	07
28.	அரசூர் தங்கையம்மன் ஆலயம்	317	38
		2,13,599	22

வழக்குகள்

இத்திருக்கோவில் சார்பாக ஓ. எஸ். நிர். 621/1912ல் அம்பாசமுத்திரம் முன்சீப் கோர்ட்டிலும், ஏ எஸ். நெ. 344/1913ல் நெல்லை ஜில்லா கோர்ட்டிலும் (எஸ். ஓ. நிர். 114/1915ல் சென்னை உயர் நீதிமன்றத்திலும், யானைப் பாலம் படித்துறை, தீர்த்தவாரி மண்டபம், கோவில் முகப்பு அனுப்பு மண்டபம், அனுப்பு மண்டபம் கீழ்புற முள்ள சன்னதியில் பந்தல் போடும் உரிமை முதலியவை களுக்கு வழக்குத் தொடரப்பட்டு கோவிலுக்கு சாதகமாக தீர்ப்புஆயிற்று. இது தவிர கோவிலின் தெப்பக்குளத்தைச் சுற்றியுள்ள வெளி மதில்களை மகமதியார் சிலர் இடித்து சிலர் ஆக்கிரமித்ததில் நெல்லை சப்கோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டு ஓ.எஸ். நிர் 35/1929ன்படி தெப்பக்குளமும் அதனைச் சுற்றியுள்ள இடமும் அதன் தெற்கிலுள்ள முடுக்கும் கோவிலுக்கே சொந்தம் என முடிவு ஆகியது.

1967ல் பாலமுருகன் சன்னதிக்கு தனி அர்ச்சகர் நியமித்தது. ஓ.எ. 2468ல் தங்களது பரம்பரை உரிமையை பாதிப்பதாக ஆலயத்தின் ஐந்து அர்ச்சகர்கள் சேர்ந்து தொடர்ந்த வழக்கு மதுரை துணை ஆணையர் 'வழக்கு மன்றத்தில் தள்ளுபடி செய்யப்பட்டது

" அங்கமெல்லாம் குறைந்து அழுகு தொழுநோயராய்
ஆசரித்துத் தின்று உழலும் புலையரேனும்

கங்கைவார் சடைக்கரந்தார்க்கு அன்பராகில்
அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே "

என்பது திருஞாவுக்கரசர் திருவாக்கு இதனை சிரமேற் கொண்டு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இத்திருக் கோயிலினுள்ளே சென்று வழிபடும் உரிமை 1938-ல் வழங்கப்பட்டது.

வருகை தந்த பெரியோர்கள்

1950-ம் வருடம் பவநகர் மகாராஜா திரு கிருஷ்ணசிங் அவர்களும், அதே ஆண்டு டிசம்பர் 11-ம் நாள் திருவாவடுதுறை ஆதீனம் 20-வது பட்டம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவான தேசிக பரமாச்சாரிய சுவாமிகளும், 1951-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 5-ம் தேதி தர்மபுரம் ஆதீனம் 25-வது பட்டம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளும், மற்றும் தமிழக முன்னாள் முதல்வர் திரு பக்தவத்சலம், மைசூர் மகாராஜா ஜெயசாமராஜ உடையார், 8-3 1978-ல் காஞ்சி புரம் புதுப் பெரியவாள் ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமி களும் இத்திருக்கோவிலுக்கு வருகை தந்துள்ளார்கள்.

திரு ஆபரணங்கள்

மூலஸ்தான காசிவிசுவநாதருக்கு வெள்ளிக்குவளை உள்ளது. அம்மன் லோகநாயகிக்கு வெள்ளி நிலையங்கி (கை, கால், கிரீடம், ஒட்டியாணம், பீடம் இரண்டு காது உட்பட) உள்ளது. தவிர மூலஸ்தான அம்மனுக்கு தங்கப் பாவாடை உள்ளது. (மார்பு, பாவாடை, கை, கால், காது, கிரீடம், கிளி, ஒட்டியாணம்)

வெள்ளிக் கிழமைகளிலும் மற்றும் திருவிழாக்களிலும் நிலையங்கி அணிவிக்கப்படுகிறது.

பால முருகனுக்கும் நிலையங்கி உள்ளது (வெள்ளி கிரீடம், வேல், கை, காலுடன் கூடிய இடுப்பு கவசம் உட் பட) உற்சவர் காசிவிசுவநாதருக்கு திருவிழாக்களுக்கு அணிவிக்க தக்க ஆபரணங்கள் பல உண்டு. அதேபோல உற்சவர் லோகநாயகி அம்மனுக்கும் தக்க ஆபரணங்கள் பல உண்டு.

அவையாவன:

சுவாமி விசுவநாதருக்கு:

கிரீடம், காது, திருமார்பு (முன் அங்கி) திரு முதுகு (பின் அங்கி) மான், மழு அபய ஹஸ்தம், வரதஹஸ்தம் கால், கத்தி, அரைப்பட்டம், யக்ஞோபவீதம் (பூணூல்) வில்வமாலை (பெரியது) கௌரிசங்கர் ருத்திராக்ஷம் முதலியனவும்

பிரியாவிடை ஆகிய யஞேன்மணிக்கு கிரீடம் ஜெப மாலையும் உள்ளன.

அம்மன் லோகநாயகிக்கு

மாம்பழ கிரீடம், காது (குண்டலத்துடன்) வைரநத்து புல்லாக்கு, சூர்யபிரபை, சந்திரபிரபை (கங்கையுடன், பிந்து சரம், கிளிராக்கொடி, திராய், தாழம் பூ, ஜடநாகம், ராக்கொடி, அட்டிகை, கால்(பாதசரம், தண்டை இவற்றுடன் கை (கடகம், காப்பு இவற்றுடன் வில்வமாலை. பதக்கம், காசுமாலை, பவுன்மாலை மாங்காய்மாலை ஷட்கோணம், கெடிகார சங்கிலி, திருமாங்கல்யம், பித்தான் அட்டியல் கைவங்கி பாசிப்பந்து, கிளி ஒட்டியாணம், வெள்ளி பிரம்பு முதலியனவும் உள்ளன.

இவையாவும் ஐப்பசி மாத திருநாள் 7-ம் நாளில் சயன அலங்காரத்திலும், திருக்கல்யாண நாள் அன்றும் மாசி மாதம் திருநாள் 7-ம் நாள் பூம்பல்லக்கு அலங்காரத்தில் முழுதும் அணிவிக்கப்படும்.

கட்டளைகள்

வ. எண்.	கட்டளை விவரம்	கிராமம்	T.D. எண்	பட்டா எண்	சர்வே எண்	விஸ்தீரணம் ஏ.	செ.
1	அர்த்த சாமக்கட்டளை	21, தென்காசி	380	2014	133-1	1	25
					135-1	1	55
					136-4	0	32
						3	12
2	வேதபாரரயணக் கட்டளை	௸	—	1998	1089	0	59
3	புராண ஊழியக் கட்டளை	௸	325	1995	1023	0	25
4	வாகனகவி கட்டளை	௸	329	—	1028	0	45
					1031	0	60
					1033/1	0	46
					1042	1	47
					1079	0	46
					1081/2	0	54
						3	98
5	7-ம்திருநாள் கட்டளை	17, மேலகரம்	—	—	695/1	1	47
6	ஊஞ்சல் கட்டளை						
7	விளா பூஜை கட்டளை	11, பெரிய பிள்ளைவலசை	283	—	473	1	74
					474	1	02
					475	1	52
					476/A1	0	11
					476/B	0	17
					477	0	60
					478	1	71
					479	1	20
					484	0	62
					485/A	0	64
					485/B	0	10
					486/1	0	41
						9	84

கட்டளைகள் (தொடர்ச்சி)

வ. எண்.	கட்டளை விவரம்	கிராமம்	T.D. எண்	பட்டா எண்.	சர்வே எண்	விஸ்தீரணம் ஏ.	செ.
8	விளா பூஜை கட்டளை	12. குத்துக்கல் வலசை	283	—	231/1	0	67
9	தைப்பூசக் கட்டளை	15, இலஞ்சி	—	480	66/2	0	50
10	காசிவிசுவநாதசுவாமி கோவில் கட்டளை	9, பண்பொழி	—	401	36/2A	0	17
11	விருதலபுரம் குடியிருப்பு	21, தென்காசி	—	433	943/1	1	20
					959/1	1	47
					959/3	0	01
						2	68
12	வருஷாபிஷேக கட்டளை	௸	—	326	1153	0	82
					1162/7	0	14
						0	96
	உபகோவில்கள்						
1	குலசேகரநாதசுவாமி உச்சந்தி கட்டளை	18, ஆயிரப்பேரி	—	40	195/3	0	51
2	௸	௸	—	246	191/2	0	97
					192	0	87
					194	1	73
						3	57
3	௸	௸	—	247	186/3	0	40
					189	2	36
					191/1	0	95
						3	71
4	௸	23, குணராம நல்லூர்	—	1	353	0	44
					356	0	26
						0	70

கட்டளைகள் (தொடர்ச்சி)

வ. எண்.	கட்டளை விபரம்	கிராமம்	T.D எண்	பட்டா எண்.	சர்வே எண்.	விஸ்தீரணம் ஏ	செ.
5	௸	௸	—	176	178	1	14
					179	2	48
					180	0	38
						4	00
	குலசேகர நாத சுவாமி அன்னபிஷேக கட்டளை	20, பாட்டப் பத்து	—	135	178/2B	1	18
7	ஸ்ரீ விண்ணவரம் பெருமாள் கோவில் ஏகாதசி கட்டளை	18, ஆயிரப் பேரி	—	198	159/3	0	90
					159/4	0	39
						1	29
8	௸	20, பாட்டப் பத்து	—	98	210/1A	0	89
9	விண்ணவரம் பெருமாள் கோவில் கட்டளை	21, தென்காசி	—	912	768/2A	0	04
10	ஸ்ரீ விண்ணவரம் பெருமாள் கோவில் நித்திய தீபக்கட்டளை மற்றும் நான்காம் கருட சேவைக் கட்டளை	20, பாட்டப் பத்து	—	132	244/3	0	46
				1	245/1	0	10
					250/2	0	37
						0	93
11	அரசூர் நங்கை யயமன் மற்றும் பொருந்திநின்ற பெருமாள் கோவில் கட்டளைகள்	21, தென்காசி	—	533	49/1	2	26
					52/2	2	41
					54	1	35
						6	02

வீரகேசரி ஜடிலவர்ம பராக்கிரம பாண்டியன்
KING PARAKRAMA PANDIAN
(THE FOUNDER OF THIS TEMPLE)

பிழை திருத்தங்கள்

பக்கம்	பத்தி	வரி	பிழை	திருத்தம்
3	2	1	1 வது பகம்	1 வது பாகம்
3	4	2	வைஷனவம்	வைணவம்
5	5	17	ஸ்தூரவலிங்கம்	ஸ்தூரலலிங்கம்
6	4	21	திருபி	திரும்பி
8	4	3	தென்காசியின்	தென்காசியில்
8	5	2	வேண்மும் பலச் சேய்	பொன்னம்பலச் சேய்
8	5	3	மன்னுமெர்ப்பனை	மன்னுமொப்பனை
9	2	6	விண்ணவரம்	விண்ணகரம்
11	2	3	இத் திருக்கோவிலில்	இத் இத்திருக்கோவில்
11	2	4	பராமரிப்பிலும்	பராமரிப்பில்
11	4	1	குளத்தூரராயன்	குளத்தூர் ஐயன்
12	2	5	திருவெம்பாவை விழா	திருப்பாவை விழா
12	3	1	விண்ணவரம்	விண்ணகரம்
12	4	1	அனைக்கரை	அணைக்கரை
13	7	1	எக்கசலி தேவியப் மன்	எக்களா தேவியம்மன்
14	1	4	இந்து சமய மன்றங்களும்	இந்து சமய மன்றங்களும் திருவள்ளுவர் கழகமும்
14	2	1	தட்பவெட் நிலை	தட்பவெட்ப நிலை
19	2	1	பொன்பதுற்ற	ஒன்பது உற்ற
20	3	7	இம்மண்டபத்தின்	இம்மண்டபத்தில்
24	1	2	கீதற்ற	தீதற்ற
26	1	10	எய்வதை	எய்துவதை
27	3	3	பண்டொருநாள்	கடல்வண்ணன் பண்டொருநாள்
27	1	1	இறைவணும்	இறைவனும்

பக்கம்	பத்தி	வரி	பிழை	திருத்தம்
30	2	5	பெற்ருன்	பெற்ருர்
31	2	2	காளா	காண
31	2	5	தாழமாங்காத	தாழமாட்டாத
31	2	5	இறைவனுர்	இறைவனார்
35	2	4	சான்றுகான்	சான்றுகாண்
31	4	8	கையினுலேயே	கையினாலேயே
37	6	4	சான்று கான்	சான்று காண்
32	2	5	ஏறி	ஏவி
37	4	3	செண்பகமாறகுற்	செண்பகமாறற்குச்
41	3	1	12 2.1972	12-2 1792
41	1	2	அச்சகர்	அர்ச்சகர்
43	5	1	கணவு	கனவு
43	4	1	அதனேயின்ன.	அதனே இன்னும்
43	4	14	இத்தெள்காசி	இத்தென்காசி
45	4	2	பெரும் பானயானவை	பெரும பான்மையானவை
46	1	2	1948	1918
46	2	1	அடைந்திருக் கின்றன	அமைந்திருக் கின்றன.
49	1	1	விண்ணவரம்	விண்ணகரம்
46	1	8	குலசேகர முடையாற்	குலசேரமுடையார்
47	2	3	டின்ருக்குடியில்	குன்ருக்குடியில்

கல் வெட்டுக்கள்

64	2	6	முருகபிராண்	முருகபிரான்
50	3	1	முந்நூற்	முந்நூற்று
50	3	2	றறுபத்தெட்ட	அறுபத்துஎட்டு அதன் மேல்
51	1	1	பொதுனுலயத்ன	பொன்ஆலயத்து
51	2	1	மாறரைனருளால்	மாறன் அருளால்

பக்கம்	பத்தி	வரி	பிழை	திருத்தம்
51	2	4	கார்பார்	காப்பார்
51	3	2	யேத்தியன்பால்	ஏத்தி அன்பால்
51	3	3	கொற்றை	கொற்கைப்
51	5	1	வருக்கவும்	வகுக்கவும்
51	5	1	வருக்க	வகுக்க
51	5	4	தலையீதியாணு	தலைமீதில் யானும்
52	1	2	புரப்பார்கண்	புரப்பார்கள்
52	1	3	மாளிகவசன்	மானகவசன்
52	2	2	ஞண்டில்	ஆண்டில்
52	2	1	கற்பணியா	கற்பணி ஆறு
52	2	2	ருனகிலே சாபதம்	ருன் அகிலேசர்பதம்
53	1	1	வெள்ளிச் சிலிம்பகத்தோ	வெள்ளிச் சிலம்பகத்தோ
53	1	3	வேகத்திருலோ	வேதத்திலோ
53	4	5	நெய்வேலி	நெல்வேலி
54	2	2	வான் வீர	வாள் வீர
54	3	1	செல்வனென	செல்வன் என
54	6	2	சொற்புனைந்தா	சொற்புனைந்தரன்
54	6	3	ஞன் மங்கலமு	நாண் மங்கலமும்
55	1	1	வாலையமும்	ஆலயமும்
55	1	2	மடியாரும்	அடியாரும்
56	2	1	கோபுரமீது லெங்க	கோபுரம் மீதில் எங்கள்
56	2	2	ளண்ணுழ்வி	அண்ணுழ்வி
56	3	2	கலைமகன்	கலைமகள்
61	2	1	சிவமிஸ்து	சிவமஸ்து
61	2	2	விஸ்வநாதய் யம்போ (ஸ)	விஸ்வநாதய்ய ஸம்போ
62	வரி	49	மஹாகேபுரமும்	மஹாகோபுரமும்
63	வரி	51	எதர்	எதிர்

பக்கம்	பத்தி	வரி	பிழை	திருத்தம்
64	2	6	முருகபிரான்	முருகப்பெருமான்
65	2	1	உத்தமருக குறபாகி	உத்தமருக்கு உறவாகி
65	3	1	உணவு செய்க் கொடுத்ததாம் சிகரி	உணவு செயக் கொடுத்த தாம் சிகரி
65	3	2	கோயில் முகம் ருேன்றும்	கோயில் முகப்பினில் தோன்றும்
65	4	1	நீருடுத்த	நீருடுத்த
65	5	4	திரிசூல படையானே	திரிசூலப் படையானே
66	2	4	சேளுடர்	சேருடர்
66	3	1	தந்தியுரி திட்டதிலும்	தந்தி உரித்திட்டதிலும்
66	5	1	பாலளுவாயன்	பாலருவாயன்
66	5	2	போளுப்புகழ்	போலருப்புகழ்
66	5	2	புதுமலர்த்தான்	புதுமலர்த்தாள்
66	5	3	மாலாளுமுதன்	மாலருமுதன்
66	5	4	சேலளுப்புகழ்	சேலருப்புகழ்
66	6	4	புகமுண்டே	சுகமுண்டே
67	4	1	விண்ணவரம்	விண்ணகரம்
69	3	2	ஆசரித்து	ஆஉரித்து
74	2	1	ஸ்ரீவிண்ணவரம்	ஸ்ரீவிண்ணகரம்
74	3	1	விண்ணவரம்	விண்ணகரம்
74	4	1	ஸ்ரீ வ்ண்ணவரம்	ஸ்ரீவிண்ணகரம்
3	3	12	அவ்வர்	அவ்வவர்
3	3	18	வைனவம்	வைணவம்
4	4	14	4ம் நூற்ருண்டு	14ம் நூற்ருண்டு
5	2	3	கூறியது	கூறுகிறது.
41	3	3	மீள	மகா
42	1	4	மகளின்	மகளிடம்

திருக்கோயில் வெளியீடு

ஏழாவது பதிப்பு

விலை ரூ. } 3-00
Price Rs.